விலை: 20/=

நமது
செய்வது துணிந்து செய் சொல்வது தெளிந்து சொல்

# முரசொலி

නමදු මුරසොලි Namathu Murasoly

வார இதழ்

முரசு – 01 (30.08.2013 – 06.09.2013) திருவள்ளுவர் ஆண்டு : 2044 முழக்கம் – 02

## 13ஆவது திருத்தத்தில் சில திருத்தங்கள் உள்ளன!



## நான் கண்டவையும் உணர்ந்தவையும்





## நினைவழியா நினைவுகளுடன்...

## அழிந்துபோகும் அடையாளங்கள்!



## முதல்வர் நமது முரசொலியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவை நாளும் விளைய உண்மையை நேர்மையாய் ஒலிக்கும் நமது முரசொலி

# பொருளாதார நெருக்கடியில் பெண்கள்



இன்றைய காலகட்டத்தில் குடும்பத்தில் ஆண் பெண் இருவருமே உழைத்தால் அன்றி குடும்பத்தைக் கொண்டு நடாத்த முடியாத சூழல் காணப்படுகின்றது. தேவைகளின் அதிகரிப்பிற்கு ஏற்றவாறு வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும், தேவையும் ஆண் பெண் இருவருக்கும் குடும்பத்தில் இன்றியமையாததாகிவிட்டது. இதனால் குடும்பங்களில் பெண்கள் அதிகளவான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். எமது நாட்டில் யுத்தம் என்பது அன மொழி பேதமின்றி அனைவரையும் பாதிப்புள்ளது. யுத்தத்தின் பின்னர் தற்போது நிலவுகின்ற வன்முறைக் கலாசாரம் மீண்டும் மக்களுக்கு பல தொல்லைகளைக் கொடுத்து வருகின்றது. ஆயுத கலாசாரம் மற்றும் வன்முறைகள் மலிந்த நாடாக எமது நாடு விளங்குகின்றது. பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் மற்றும் பாலியல் பலாத்காரம் என்பன அவர்களது சுயாதீனமான நடமாட்டத்தை இல்லாது செய்கின்றன. வீடுகளில்கூட பெண்கள் நிம்மதியின்றியே வாழ வேண்டிய அச்சமான நிலையே தற்காலத்தில் நிலவி வருகின்றது.

தற்போது நமது நாட்டில் வேகமாக வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரம் காரணமாக இலங்கை வாழ் மக்கள் அனைவருமே நேரடியான தாக்கத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். பொருட்களின் நாளாந்த விலைவாசி உயர்வு காரணமாகத் தமது வருவாயைக் கொண்டு அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வறுமைக் கோட்டுக்குட்பட்ட மற்றும் நடுத்தட்டு மக்கள் தமது வருவாயைக் கொண்டு போதியளவில் மூன்று வேளையும் உண்ண முடியாத தொடர்ச்சி 9 ஆம் பக்கம்

# நான் கண்டவையும் உணர்ந்தவையும்

நல்லூருக்கும் ஈழத்தமிழர்களுக்கும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் பல்வேறு அடிப்படைகளில் நெருக்கமான வரலாற்றுப் பின்னணி உண்டு. தமிழர்களின் தொன்மைய வரலாற்றை ஆதாரப்படுத்தவும் இந்த நாட்டில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கும் அப்பால் தமிழர்கள் தம்மைத் தாமே ஆண்டார்கள் என்பதற்கும் நல்லூரை மையப்படுத்திய சான்றுகளே இன்றும் கண்கூடாகக் கண்டு ஆதாரப்படுத்தக்கூடியதாகவுள்ளன. அதனையும் சிலர் அரசியல் செல்வாக்குகளைப் பயன்படுத்தி தமது பரம்பரைச் சொத்துக்களாக வளைத்துப் போடுவதும் அண்மைய செய்திகள்.

எது எப்படியாயினும், நல்லூருக்கும் ஈழத்தமிழர்களுக்குமான தொடர்பு பலவகைகளில் வெறுமனே வரலாற்று ஆதாரங்கள் மட்டுமன்றி உணர்ச்சி மயப்பட்டவையும் கூட. அத்தகைய நெருக்கமான நல்லூரின் முக்கிய குறியீடான நல்லூர்க் கந்தனின் வருடாந்த மஹோற்சவம் தற்போது நடைபெற்று வரும் சூழலில் நல்லூரில் அன்றாடம் நாம் காணும் பலவிடயங்கள் மனதை பலவகைகளில் பாதிக்கின்றன. அச் சம்பவங்களைத் தங்களோடு பகிர்ந்து கொள்கின்றோம். அவை எவ்வாறு உங்கள் மனதைப் பாதிக்கின்றன என்பதை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

**சம்பவம் 1**

தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் காலத்துக்குக் காலம் பல்வேறு பரிமாணங்களை எடுத்திருந்தது. ஆயுதப் போராட்டம், அகிம்சைப் போராட்டம், ஜனநாயகப் போராட்டம், அமைதிகாக்கும் போராட்டம் எனப் பல வகைகளில் தன் இலக்கை நோக்கி நகர எத்தனித்தது. ஒவ்வொரு போராட்ட வடிவிலும் பெயர்குறித்துச் சொல்லக்கூடிய பல விம்பங்கள் நிறைந்திருந்தாலும் அகிம்சைப்போராட்டம் அதிலும் ஈகைப்போராட்டம் என வரும் போது இருவர் மட்டும் நினைவுக்கு வருவர். பலருக்கு ஒருவர் மட்டுமே என்றும் நினைவுகளில் நீங்காதிருப்பார். அவர் தான் திலீபன். அந்நாளில் இந்திய அரசை அகிம்சை வழியில் எதிர்த்து உலகில் எவருமே இதுவரை செய்யத்துணியாத ஈகைச்சாதனையை திலீபன் நல்லூரில் நிகழ்த்திக்காட்டினார். அவரது போராட்டத்துக்கு பின்னான உணர்ச்சி என்பது ஒவ்வொரு தமிழ் மக்கள் மனங்களிலும் நீங்கா நிலை கொண்டது. அத்தகு புனிதனுக்கான நினைவுமையங்கள் நல்லூரில் இரண்டு இருந்தன. ஒன்று அவர் உண்ணாவிரதமிருந்த நல்லூரின் வடக்கு வீதியில் ஓர் நினைவுக் கல்வெட்டு. மற்றையது தென்மேற்கு மூலையில் ஒரு தூபி. இன்று இரண்டும் இருந்த இடத்தில் இல்லை. தூபி கொழும்பில் இருந்து வந்த குண்டர்களால் இரவோடிரவாக உடைத்தெறியப்பட்ட பின்னும், நீண்ட நாட்களுக்கு கல்வெட்டு நிலையாய் நின்றது. ஆனால் அதுவும் பின்னர் கிளறப்பட்டு பக்கத்தில் பாராமுகமாய் உருட்டப்பட்டுள்ளது. இப்போது நல்லூரில் காவற் கடமையில் நிற்கும் பொலிசார் காலை மாலை வேளைகளில் அதனைக் கல்லாசனமாக பாவித்து வருகின்றனர். அந்நியரின் இருப்பைப் பற்றி கேள்வி கேட்டவன் கல்வெட்டு இன்று அவர்களுக்கு இருக்கையாகியிருக்கின்றது. தூபி இருந்த இடத்தில் இப்போது தென்பகுதி வர்த்தகர்கள் பிளாஸ்ரிக் சாமான்களை அள்ளிக்குவித்து மலிவு விலை என கூவிக்கூவி விற்கின்றார்கள்.

**சம்பவம் 2**

நல்லூருக்கு வரும் சிறுவர்கள் அத்தனை பேரினதும் அதிக விருப்பத்துக்குரிய இடம் அங்கு குவித்திருக்கும் மணல்தான். முன்னர் அறிமுகம் இல்லாத சிறுவர்கள் அங்கு ஒன்றாகி; இணைந்து; மணலைக் குவித்து; தங்கள் எண்ணத்துக்கு ஏற்ற விதத்தில் அமைக்கும் உருவங்கள் உலகில் அதிக மகிழ்ச்சியைத் தரும் கலைப்படைப்புக்கள். தினமும் அவர்கள் கூடவிருந்து அவதானித்ததில் ஒன்றை உணரமுடிந்தது. அவர்கள் அமைக்கும் உருவங்களுள் அநேகமானவை விகாரைகள் போன்ற தோற்றங்களைத் தான் கொண்டிருந்தன. இது தொடர்பில் ஒரு சிறுவனிடம் கேட்ட போது ஆழமான விடயமொன்றை மிக லாவகமாகச் சொன்னான். "அண்ணை கோபுரங்கள் கட்டுவதை விட விகாரைகள் கட்டுவதுதான் இலகுவாயிருக்கு" எத்தனை உள்ளார்ந்தம் மிக்க தத்துவம்.

> "உலகில் எவருமே இதுவரை செய்யத்துணியாத ஈகைச்சாதனையை திலீபன் நல்லூரில்; நிகழ்த்திக்காட்டினார். அவரது போராட்டத்துக்கு பின்னான உணர்ச்சி என்பது ஒவ்வொரு தமிழ் மக்கள் மனங்களிலும் நீங்கா நிலை கொண்டது. அத்தகு புனிதனுக்கான நினைவுமையங்கள் நல்லூரில் இரண்டு இருந்தன."

இதற்கு மறுதலையாக மணல் விளையாடும் சிறுவர்களின் வயதினை ஒத்த சில சிறுவர்கள் மணல் விளையாடும் சிறுவர்களை ஏக்கமாகப் பார்த்தபடி "அண்ணை கற்பூரம்... அக்கா தேங்காய்.. அம்மா கற்பூரம் மூன்று இருபது ரூபாய்" என வீதியெங்கும் ஓடிஓடி மற்றவர்களைக் கலைத்து, தாங்கள் களைத்துச் சோர்ந்தார்கள். பலர் பரிதாபப்பட்டு வாங்கிக்கொண்டார்கள். மனம் கற்பூரச் சிறுவர்களுக்காய் முருகனிடம் மன்றாடிக் கொண்டது.

கற்பூரம் விற்கும் சிறுவர்கள் தொடர்ச்சியாக நாளாந்தம் கலைத்தும் தினமும் கோவிலுக்குப் போகும் எனது நண்பன் ஒருவன் அவர்களிடம் கற்பூரம் வாங்கியது கிடையாது. கேட்டதற்குச் சொன்னான் "நாங்கள் வாங்கி ஊக்குவித்தால் அவர்கள் தொடர்ந்து இதையே தொழிலாக்கி படிப்பை கைவிட்டு விடுவார்கள்." எனவே இந்தத் தொழில் கஸ்டம் என்ற மனநிலையை உருவாக்கத்தக்கவிதத்தில் நாங்கள் நடந்து கொள்வது அவர்களது எதிர்காலத்துக்கு நல்லது. நல்லத்தானேயிருக்கு அவனது சிந்தனை.ஆனால் பக்கத்தில் இருந்த ஆச்சியொருத்தி சொன்னார் "தம்பி முருகனும் எங்களைச் சோதிக்க கற்பூரம் விற்பான் வாங்காமல் விடக்கூடாது" ஆச்சியின்ர கைநிறைய கற்பூரம். முருகன் விற்றால் என்ன. விற்கா விட்டால் என்ன நான் கற்பூரம் வாங்கும் காசில் ஒரு குழந்தை பசியாறுமாக இருந்தால் வாங்குவது நல்லம் தானே. திருடுவதிலும் இது நன்றே.

இது இப்படியிருக்க கடந்த வருடம் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுவும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களும் சேர்ந்து கற்பூரம் விற்ற சிறுவர்களை கலைத்துப் பிடித்து; கற்பூரங்களைப் பறித்து; அவர்கள் அத்தொழிலைச் செய்யவிடாமல் தடுத்திருந்தனர். அதனைச் சிலர் பாடசாலை விடுமுறை நாளில் தானே நல்லூர்த்திருவிழா. அவன் இந்த கற்பூர வியாபார லாபத்தில் அடுத்த தவணை புதிய பாடசாலைப் பை வாங்கலாம் என கனவு கண்டிருப்பான். அவனது கனவைச் சட்டத்தின் பெயரால் நாங்கள் சிதைத்து விட்டோம் என்ற விமர்சனங்கள் எழுந்தன. அதனால் தானோ என்னவோ இம்முறை சட்டத்தின் ஆட்சியை இவ்விடயத்தில் நல்லூரில் காணவில்லை.



**சம்பவம் 3**

அண்மைக்காலமாக தமிழர் கலாசாரம் சம்பந்தமாக காரசாரமான வாதங்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. அதிலும் ஆடைக்கலாசாரம் அளவு கடந்த விமர்சனங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. தற்போது யாழ்ப்பாணத்தில் பெருந்திருவிழாக் காலம். ஆதலால் ஆலயங்களுக்குப் பண்பாட்டு உடையுடன் வருமாறு அறிவித்தல்கள் விடுக்கப்படுகின்றது. நல்லூரில் ஒரு நாள் வெள்ளைக்கார இளைஞன் ஒருவன் முக்கால் காற்சட்டையுடன் உள்ளே நுழைய முற்பட்ட போது வாசலில் காத்திருந்த கலாசாரக் காவலர்கள் அவரை அனுமதிக்கவில்லை. முகத்தில் வருத்தம் தெரிய வியப்புடன் திரும்பிச்சென்றார். அடுத்தநாள் என்ன ஆச்சரியம் அதே இளைஞன் வேட்டி சால்வையுடன் வைரவர் ஆலயத்தில் தியானத்தில் இருந்ததைக் காணும் வாய்ப்புக் கிட்டியிருந்தது. எங்கள் கலாசாரம் அவரைத் தொற்றிக் கொண்டதும் பற்றிக் கொண்டது மகிழ்வாயிருந்தாலும் திருந்த வேண்டிய எம்மவர்கள் குறித்து மனம் வேதனைப்பட்டுக்கொண்டது.

**சம்பவம் 4**

அதிகாலை வேளை அரோகரா ஒலியும் முருகனுக்கான வாழ்த்துக்களுமே நல்லூரின் நான்கு புறமும் நிறைந்திருக்கின்றது. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் அங்கப்பிரதட்சணம் செய்ய நல்லூரில் கூடுகின்றார்கள். பக்தி மணம் கமழும் இறைஒலிகளை எழுப்பியவாறு அவர்கள் வீதிகளை வலம் வருவது இனத்தின் ஆரோக்கியமான ஆன்மீக எதிர்காலம் குறித்து நம்பிக்கை விதைகளை விதைக்கின்றது. இதைச் சொன்னபோது பக்கத்தில் இருந்த பெரியவர் சொன்னார் திருவிழா முடிய அவங்கள் மாறிவிடுவாங்கள். தம்பிமார் அப்பு சொன்ன கருத்தைப் பொய்யாக்க வேண்டும். அப்பு இன்னொன்றும் சொன்னார் பிரதட்டை அடித்து எழும்பியவுடன் முருகன்ர வாசலில வைத்து "நான் தமிழ்க் கலாசாரத்தை காப்பாற்ற என்னரல் இயன்ற பணியாற்றுவேன். இது முருகன் மேல் ஆணை" என சத்தியக் கடதாசியில பெடியளிட்டை கையெழுத்து வாங்கவேண்டும் என்று. அப்புவின் யோசனையை எல்லாரும் ஏற்காட்டியும் தங்கள் மனதில் தன்னும் சில சத்தியங்களைச் செய்யவேண்டும்.

இப்படி நல்லூரின் வீதியில் பல சம்பவங்கள்.. ஒவ்வொன்றுக்கும் பின்னும் ஓராயிரம் கதைகள்.

**நயனன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது
# முரசொலி
நமது முரசொலி Namathu Murasoly வார இதழ்
முழக்கம் - 01
இல.:18/1, இளையதம்பி ஒழுங்கை, செம்மணி வீதி நல்லூர்.
E-mail: namathumurasoli@gmail.com, Tel:0773673829

## நவிப்பிள்ளை சொல்லப்போவது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் பல்வேறு கோணங்களிலும் நோக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் அவரது வருகைக்குக் கண்டனங்கள். எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கிடையில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற இடங்களிற்குச் சென்றுள்ள அவர் பல தரப்பினரையும் சந்தித்துள்ளார். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் போதனா வைத்தியசாலை, பொதுநூலகங்களிற்குச் சென்று கலந்துரையாடியுள்ளார். ஏற்கனவே திட்டமிட்டு இருந்தபடி அதிகாரிகள் முன்னரே வருகை தந்து. அவரை நன்கு உபசரித்து, கவணித்து, அவர் சென்ற இடமெல்லாம் கூடவே சென்று தங்களுடைய நிகழ்ச்சி நிரலுக்கேற்ப அவரைத் தங்கள் பாதையாலேயே - நவநீதம்பிள்ளைக்கென்றே போடப்பட்ட பாதைகளாலேயே - கூட்டிச் சென்றுள்ளனர்.

ஆனால், மறுபுறம் அம்மையாரைச் சந்தித்து, காணமாற்போன தம் உறவுகள் பற்றிய மனக்குமுறல்களையும், கண்ணீர்களையும் வெளிப்படுத்தி, உள்ளத்து ஆதங்கங்களையும், துயரங்களையும் அவர்முன் கொட்டித் தீர்க்க வேண்டுமென உச்சி வெயிலிலும் கண்ணீரும் கம்பலையுமாகக் காத்திருந்து, வீதியிற் சோர்வுற்று மயங்கிவீழும் நிலையில் அன்னையர்கள், பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் அனைவரும் காத்திருக்க பின்வாசலாலேயே சென்றுவிட்டார். காத்திருந்த மக்களின் காத்திருப்பு இன்னும் எத்தனை காலங்கள்தானோ என்று தெரியவில்லை.

இதற்கு அடுத்து, முள்ளிவாய்க்கால், கேப்பாப்பிளவு போன்ற இடங்களிற்கும் அவர் சென்றுள்ளார். அங்கு மக்கள் பிரதிநிதிகளில் ஓரிருவரை மாத்திரம் சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு, உரையாடியுள்ளார்.

கடந்த காலங்களில். இங்கு பலரும் வருகை தந்து, பார்த்து, உண்டு மகிழ்ந்து சென்றுள்ளார்கள். அவர்களது விஜயங்கள் வெறும் அறிக்கைகளுடன் முடிந்துள்ளன. மறைந்துள்ளன. ஆனால் ஆணையாளரின் விஜயம் அவர் வருகை தந்த காலம், அவரது விஜயத்தின் நோக்கம் என்பனவற்றினால் முக்கியம் பெறுகின்றது. அவர் சொல்லப் போகும் செய்தி பெறுமதியும், முக்கியமும் வாய்ந்தவை.

ஜனநாயக நாட்டில் தேர்தல் மிகவும் பெறுமதியானது. சுதந்திரமான தேர்தல் ஜனநாயகத்திற்கு அடிப்படையானது. ஆனால், நமது நாட்டின் துர்ப்பாக்கியமான அரசியற் கலாசாரம் ஜனநாயகமான தேர்தல் ஒன்றை எதிர்பார்க்க முடியுமா என்ற கேள்வியை மீளவும் தோற்றுவித்துள்ளது. தெருவீதிச் சண்டித்தனங்களும், வீதிகளில் சுவரோவியம் வரைகின்ற தேர்தல்கால ஓவியக் கலாசாரமும் ஒருபுறம் சட்டத்தை இழிவுபடுத்துகையில். மறுபுறம் மக்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. மேலும், மதிநுட்பமுள்ள, நாணயமுள்ள தலைமைகளை மக்கள் எதிர்பார்க்கையில் வேட்பாளர்கள் சிலரின் நடத்தைகள் மனநோயாளர்களைத்தான் கண்முன் ஞாபகப்படுத்துகின்றன.

தேர்தலுக்கு முந்திய இந்நிலைமைகளை நவநீதம்பிள்ளை நிச்சயம் கண்டிருக்கக்கூடும். அதுமட்டுமன்றி, 2009ம் ஆண்டில் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து, சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திடம், அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து, அதன் மூலம் நல்லினக்கத்தை ஏற்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குமாறு அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட அழுத்தத்தினைத் தொடர்ந்து, நல்லினக்கத்தை ஏற்படுத்துவதற்கானதொரு பொறிமுறையாகவே மகாணசபைத் தேர்தல் நடைபெறுகின்றது. ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்காவின் இரண்டு தீர்மானங்களிலுங்கூட இது வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இப் பின்னணியில் நோக்குகின்றபோது தேர்தல் வன்முறைகள் பற்றிய நவநீதம்பிள்ளையின் அவதானிப்புக்கள் முக்கியமான விடயமாகவே கருதப்படுகின்றன.

மொத்தத்தில், அவரது வருகையின் போது கண்ட, கேட்ட, அவதானித்த விடயங்களின் அடிப்படையில் நவநீதம்பிள்ளை எப்படிப்பட்ட விடயங்களை இங்கிருந்து எடுத்துச் செல்கின்றார்? என்ன சொல்லப்போகின்றார்..?

அத்தகைய செய்தி வலியோடு நாட்களைக் கழிக்கும் மனங்களுக்கு அமைதியைக் கொடுக்குமா? வாழ்க்கை பற்றிய நம்பிக்கையைக் கொடுக்குமா? என்பதைப் பொறுத்திருந்து அவதானிப்போம்.

# அழிந்துபோகும் அடையாளங்கள்

பொதுவாகவே ஒவ்வொரு நாட்டவர்க்கும் ஒவ்வொரு இனத்தவர்க்கும் அடையாளமாக இருப்பது அவர்களின் ஆடைகள். அந்த ஆடைகள் அவர்களது இன, மத, கலாசாரத்தை பிரதிபலிக்கும் விதத்தில் அமைந்திருக்கும். அதிலும் வடக்கில் வாழும் தமிழர்களிற்கென்று ஒரு ஆடை அடையாளம் இருந்தது. குறிப்பாக பெண்களின் ஆடைகளையும் பண்பாட்டினையும் தென்னிந்திய சினிமாவில் உயர்வாக பேசப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் போருக்கு முன் போரிற்கு பின் என்று காலத்தையும் ஆடைக் கலாசாரத்தையும் வகைப்படுத்திப் பார்த்தால் நாம் எங்கு சென்றுவிட்டோம் என்பது புரியும்.

யுத்த காலங்களில் வடபகுதி இளைஞர் யுவதிகள் யுத்தத்தினாலும், கல்விக்காகவும் வேலை வாய்ப்பிற்காகவும் தென்பகுதிக்கு நகர்ந்தனர். அங்கே

இறப்பின் துயர் பகிர வந்தவனையும், புது உயிரின் பிறப்பிற்காய் கடவுளுக்கு நன்றிசொல்ல வந்தவனையும் துடக்கென்று தூரத் துரத்திய ஆலயச் சமூகம் துடக்கோடு வந்தாலும் துட்டோடு வந்தால் அது ஏற்புடையதென்ற புதுத் தத்துவத்திற்குள் புகுந்துவிட்டது

எமது ஆடைகளும், கலாசார செயற்பாடுகளும் நாம் வடபுலத்துத் தமிழர்கள் என்பதைப் பறைசாற்றியது. இதனால் அவர்களுக்கு ஏற்பட்ட கெடுபிடிகளால் ஆண் பெண் இரு பாலாரும் தமது நடை, உடை, பாவனையை மாற்றிவிட்டனர். மிகவும் கட்டையாக அரித்து வெட்டப்பட்ட தலைமுடியும், நிமிர்த்தப்பட்ட கொளரும் கழுத்திலும், கையிலும் வெள்ளிச் சங்கிலியுமாக, தமிழை ஆங்கிலம் கலந்து அல்லது கொச்சைத் தமிழில் பேசிக்கொண்டே வாழப் பழகிக்கொண்டனர். பெண்களில் பலர் பொட்டு - வைப்பதையும் தவிர்த்து இறுக்கமான ஆடைகள் அல்லது தமிழ் கலாசாரம் அல்லாத ஆடைகளையும் அணிந்தனர்.

தமிழ்ச் சமூகத்தில் மரணச் சடங்கில் ஒப்பாரிவைத்து அழுவது காலங்காலமாக இன்றும் பல இடங்களில் நடந்து வருகிறது. 1995ம் ஆண்டு இடப்பெயர்வு வன்னிவாழ் மக்களுடன் முன்பிருந்ததை, விட நெருக்கமான குடும்ப பிணைப்புக்குள் கொண்டுசென்றது. அதற்குக் காரணம் இடப்பெயர்வின் போது அவர்கள் எங்களுக்கு நீட்டிய நேசக்கரங்களும் அங்கு நடைபெற்ற திருமணங்களும். நாம் சொந்த இடத்திற்கு வந்தபொழுதிலும் அவர்களை மறக்க முடியாதவர்களாகவே வாழ்கிறோம். ஆனால் போர் உச்சக்கட்டத்தில் நடைபெற்றவேளை அந்த உறவுகளின் மரணச்செய்தியை நாம் கேள்வியுற்றபோதும் மனம் விட்டு அழமுடியாதவர்களாக நான்கு சுவருக்குள் அழுதுவிட்டு அறைக்குள்ளேயே ஆண்டவனை வேண்டிக்கொண்ட காலமும் மறக்கமுடியாதவை. மரணம் நடைபெற்ற வீட்டில் மரணித்தவரின் படத்தின் முன் விளக்கேற்றுவதும் அவர்கள் இறைவனடி சேர்ந்ததால் சில சிறப்பான நாட்களில் அவர்களை வணங்குவதும் எமது பண்பு. ஆனால் இன்றய சூழ்நிலையில் விளக்கேற்றுவதே பெரும் சர்ச்சையாக மாறிவிட்டது. இந்த நாட்கள் நமக்குள் மன அழுத்தத்தை விட்டுச் சென்றுள்ளன. கடலில் கரைக்கவேண்டிய சாம்பலைக் கண்ணீரால் கரைத்தோம். கடலில் மீன்களுக்கு பிண்டமிட்டவர்கள் தம் உறவுகளின் பிணங்களை காக்கைகளுக்கும், நாய்களுக்கும் பிண்டமாய் விட்டு வந்தமை மறக்க முடியாத வரலாறு இவர்களின் மன உளைச்சலையும் மறுக்கப்பட்ட வழக்கங்களையும் உணராமல் போவது பெரும் தவறு.


புலம் பெயர்ந்த எமது உறவுகள் நமக்காகவும், மண்ணுக்காகவும் அங்கிருந்து குரல்கொடுத்தாலும்; நமது மண்ணை மிதிக்கும்பொழுது அன்னிய நாட்டின் கலாசார உடையிலும், உரையாட்லிலுமே நம்மைச் சந்திக்கின்றனர். பல ஆண்டுகள் அவர்கள் வெளிநாடுகளில் இருந்து வந்ததால் அவர்கள் அந்த நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டனர் என்று நமக்கு நாமே ஆறுதல் கூறுகின்றோம்.

ஒருவருடத்திற்கு முன் அமெரிக்காவிலிருந்து வருகை தந்த ஒரு குழுவினர் மார்ட்டின் லூதர் கிங் அவர்களின் அஹிம்சை வழி தொடர்பான ஒரு பயிற்சிப் பட்டறையை யாழ்ப்பாணத்தில் நடாத்தினர். இதில் வளவாளராகக் கொழும்பிலிருந்து வருகை தந்த ஒரு பெண்மணி தன்னை அறிமுகம் செய்யும்பொழுது எனது பெற்றோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், தானும் யாழ் மண்ணிற்கு சொந்தக்காரி என்றும், ஆரம்பகால போரின்போதே தமது பெற்றோரும் யாழ் மண்ணை விட்டுச் சென்றதாக பெருமையாக உரிமையோடு கூறிக்கொண்டார். அத்தருணத்தில் பங்குபற்றுனர்களின் கைதட்டலையே ஆவலோடு எதிர்பார்த்திருந்த அவர், பங்குபற்றிய அனைவரும் தமக்குள் சலசலத்துக்கொண்டதை பார்த்து நிலைகுலைந்து போனார். காரணம் "நான் ஒரு தமிழ் பெண்மணி" என்பதை அறிமுகம் செய்ததே ஆங்கிலத்தில்தான். முரண்பாடுகளின் ஆரம்பமே மொழிப் புறக்கணிப்பு என்பதை உணரமுடியாத அந்தப் பெண்மணி எப்படி, தன் கறுப்பினத்தின் விடுதலைக்காக அஹிம்சை வழியில் போராடிய மார்ட்டின் லூதர் கிங்கின் கொள்கைகளைக் கற்பிக்க முன்வந்தார் என்பதே எல்லோர் மனதிலும் எழுந்த கேள்வி. தன் தாய்மொழியையே புறக்கணித்துப் பேசியதால் அவர் அவரது உரையைத் தொடரமுடியாமல் போனார். இது ஒரு உதாரணம் மட்டுமே.

இந்துக்களின் ஆலயங்கள் ஒரு புனித இடங்களாகப் போற்றப்பட்டு வந்ததற்கு காரணம் அங்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும், ஒழுக்க விதிமுறைகளும்தான். ஆடையிலிருந்து நாம் ஆலயத்தினுள் எடுத்துச் செல்லும் பொருட்கள் வரை ஆலய நிர்வாகங்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. அந்தக் காலகட்டத்தில் நாம் முழுக் காற்சட்டை அணிந்து போனாலே தவறென்று உணர்த்தியவர்கள் இன்று உடலில் ஆடை என்ற பெயரில் எதுவேண்டுமானாலும் போடலாம் என்று தமது கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளனர். இன்று மடிகணினியை மடியில் வைத்து பூஜை பார்க்கும் நமது வெளிநாட்டு சகோதரர்களைப் பார்க்கும் பொழுது அவர்கள் மீது அல்ல, ஆலய நிர்வாகிகள் மீதே கோபங்கொள்ளத் தோன்றுகிறது. இப்படிக் கட்டுப்பாடுகளை நீக்காவிட்டால் எப்படிக் கோபுரம் கட்டுவது என்ற சிந்தனை மேலோங்கியதால் ஆகம விதிமுறைகளும், சமய விழுமியங்களும் மறக்கப்பட்டுவிடுகிறன. இறப்பின் துயர் பகிர வந்தவனையும், புது உயிரின் பிறப்பிற்காய் கடவுளுக்கு நன்றிசொல்ல வந்தவனையும் துடக்கென்று தூரத் துரத்திய ஆலயச் சமூகம் துடக்கோடு வந்தாலும் துட்டோடு வந்தால் அது ஏற்புடையதென்ற புதுத் தத்துவத்திற்குள் புகுந்துவிட்டது (அனுபவத்தைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை).

"நான் ஒரு தமிழ் பெண்மணி" என்பதை அறிமுகம் செய்ததே ஆங்கிலத்தில்தான். முரண்பாடுகளின் ஆரம்பமே மொழிப் புறக்கணிப்பு என்பதை உணரமுடியாத அந்தப் பெண்மணி எப்படி, தன் கறுப்பினத்தின் விடுதலைக்காக அஹிம்சை வழியில் போராடிய மார்ட்டின் லூதர் கிங்கின் கொள்கைகளைக் கற்பிக்க முன்வந்தார் என்பதே எல்லோர் மனதிலும் எழுந்த கேள்வி.

இவை எல்லாம் அழிக்கப்பட்ட எமது அடையாளங்களாக இருந்தாலும் இவை அனைத்துக்கும் போர் மட்டுமே காரணம் என்று கூறிவிட முடியாது. இவற்றிற்கு எமது பொறுப்பற்ற செயல்களும், சுயமற்ற நிலையும் ஒரு காரணம் என்பதை நாம் எற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். இல்லையா...?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்பிழுத்த குரங்கு போலன்றி

- பார்த்தீபன்

மாகாணசபை முறைமையை தமிழர்கள் தங்கள் அரசியல் தீர்வுக்கான முதற்படியாக ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக்கொண்டு முன்னேற வேண்டும் என்கின்ற ஒரு மனோபாவம் இன்று பலரிடத்தில் வியாபித்திருக்கின்றது. தமிழ்த் தேசியம் பேசுகின்ற, அதன் பெயரில் போட்டியிடுகின்ற அரசியல் தலைவர்களில் சிலரும் மகாணசபையை அவ்வாறுதான் கருதுகின்றார்கள். 'மாகாண சபையைத் தீர்வாக ஏற்கமுடியாது, ஆனால் முதற்படியாக ஏற்கலாம்' என்றும், 'சேமம் இழுத்துக் கொண்டு இருக்கும் மாகாண சபைக்கு உயிரூட்டி விட்டு பின்னர் தொடர்ந்து அடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்லலாம் என்றும் பேசிவருவதைக் கேட்கமுடிகிறது. ஆக, இன்று மாகாண சபை மீது எம் அரசியல்வாதிகளுக்கு ஒரு இனந்தெரியாத காதல் ஏற்பட்டுள்ளது.

இந்த அளவுக்கு மகாணசபை முறைமையில் தமிழர்களுக்கு என்னதான் அப்படி உள்ளது? தமிழர்கள் ஒரு தேசம் என்ற வகையில் மாகாணசபை முறைமையை ஏற்க முடியாது என்று கடந்த வாரப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

எமது அரசியல் தலைவர்களில் பலர், மாகானசபையை எமது தேசிய அரசியல் தீர்விற்கான யோசனைக்குள் உட்புகுத்துவதன் மூலம் தீர்வுக்கான பொறிமுறைகளை மாகாணசபைக்குள் முடக்கப் பார்க்கின்றார்கள். எனவே, மகாணசபை முறைமையை அரசியல் தீர்வுக்கான முதற்படியாக ஏற்றுக்கொள்வதில் உள்ள சில முக்கிய பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவது அவசியமானது.

தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் பிரச்சினைகளை மையமாக வைத்து, பிரத்தியேகமான தேவைகளைக் கருத்திற் கொண்டு தமிழர்களின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் மாகாண சபை உருவாக்கப்படவில்லை. மாகாணசபை முறைமை முழு இலங்கைக்கும் பரவலாக, சிங்கள மக்கள் வாழும் மாகாணங்கள் உட்பட, மிகவும் வரையறுக்கப்பட்ட வகையில் அதிகாரங்களை விரிவுபடுத்துகின்றது. இலங்கை மத்திய அரசின் முழுமையான அரசியல் கட்டுப்பாட்டின் கீழ் நாடு முழுவதற்கும் உருவாக்கப்பட்ட நிர்வாக அமைப்பே மாகாணசபை முறைமை. தமிழர் பகுதிகளும் தங்கள் பிரதேச தனித்துவங்களை இழந்து இந்த நிர்வாக அமைப்பின் ஒரு அங்கமாக மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்க இம்முறைமை வழிவகுக்கின்றது.

மாகாண சபையை அறிமுகப்படுத்திய 13ம் திருத்தம் ஜனாதிபதிக்கும், அவது பிரதிநிதியாகிய ஆளுநருக்கும், பெரும்பான்மையினரின் தீர்மானத்திற்குட்பட்ட பாராளுமன்றத்திடமும் வரையறையற்ற அதிகாரங்களை வழங்குகின்றது. மத்திய அரசாங்கத்தின் இந்த மூன்று முக்கிய துறைகளிடமிருந்து மாகாணசபையின் ஆட்சி அதிகாரங்கள் வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இன்னொன்றையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். வெ[illegible]படையாக 13ம் திருத்தத்தை ஆதரிப்பதாகவும், அதனை மையமாக வைத்து அரசியல் பிரச்சினையைத தீர்ப்பதற்கு விருப்பமுடையதாக அரசாங்கம் காட்டிக் கொண்டாலும், மறுபுறத்தில் 13ம் திருத்தத்தினை இல்லாதொழிக்கும் இரட்டை வேடத்தைக் கொண்டிருக்கின்றது.

எமது மக்களின் வாழ்வினைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்குக்கூட மாகாணசபையால் இயலாத சூழல் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக அவசர அவசரமாக தோற்றுவிக்கப்பட்டுள்ள வடமாகாணத்திற்கான தேசிய செயலணிக்குழு, இனிவரும் காலங்களில் வடமாகாண சபைக்கு முட்டுக்கட்டை போட காத்திருக்கின்றது. அத்துடன் பாராளுமன்றத்தின் சட்டங்களே மாகாணச் சபைச் சட்டங்களைக் காட்டிலும் உயர்ந்தவையாகக் காணப்படுகின்றன.

உண்மைகள் இவ்வாறிருக்க, மாகாணசபை சுயாட்சி, அதிகாரப் பரவலாக்கம், படிப்படியாக முன்னேறுதல் என்பனவெல்லாம் வெறும் கேலிக்கூத்தாகவே தென்படுகின்றது. மாகாணசபை முறைமை பற்றித் தெளிவற்ற மனோபாவமும், கொள்கை விளக்கமுமின்றி தத்தமது போக்கில் அதுபற்றிக் கருத்து வெளியிடுவதை அரசியல் தலைவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மாகாணசபை பற்றிய நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைக்கும், மாகாணசபை அரசியலுக்கு தெளிவான வரையறையைக் கூறும் விஞ்ஞாபனத்தை விரைந்து வெளியிட வேண்டும். எந்தவொரு நழுவல் போக்கலோ சமரசமோ இன்றி, தெளிவாகவும் வெளிப்படையாவும் இம்முறைமையின் ஒத்துவராத தன்மையினை அதில் எடுத்துக் கூறுதல் வேண்டும்.

அவ்வாறின்றி, ஒருமுறை இந்த மாகாணசபை என்ற பொறிக்குள் எமது அரசியல் தீர்வினையோ, அதன் பொறிமுறையையோ நாம் கொண்டு செல்வோமானால், எமது தேசிய அரசியல் தீர்வுக்கும், அதன் போக்குக்கும் நாமே பொறி வைத்தவர்களாக ஆகிவிடுவோம். அத்துடன், தமிழ் மக்களின் அரசியல் பேராட்டத்திற்கு மாகாணசபை மற்றுமொரு முள்ளிவாய்க்காலாக அமைந்து விடலாம்.

மாகாணசபையின் உண்மை இதுதான். எமது அரசியல் தலைவர்கள் கூறிவருவதைக் கேட்கும்போது, சிறுவயதில் படித்த ஆப்பிழுத்த குரங்கின் கதைதான் ஞாபத்திற்கு வருகின்றது.



மாமனிதர் குமார் பொன்னம்பலம்

**தமிழ்த் தேசிய அரசியலில் நிதானமான சிந்தனை கொண்டு செயற்பட்ட அரசியல் முன்னோடி. அவரது தெளிவான சிந்தனை, அர்ப்பணம், துணிச்சல் ஆகியவற்றுக்குக் கௌரவம் அளிக்கும் வகையில், அரவது ஞாபகார்த்த உரையில் முன்வைக்கப்பட்ட காலப் பெறுமதியுள்ள கருத்துக்கள் சிலவற்றை முரசொலி பதிவுசெய்து கொள்ளுகிறது. மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் செம்மையான பாதை தமிழ் அரசியலுக்கு என்றும் முன்னோடியாக அமைந்திருக்கும்.**

- மே 2009ற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று மீளவும் 1980களிற்குப் முன்னரான மிதவாத அரசியலுக்குச் சென்று விட்டதை நாம் அவதானிக்கலாம்.
- போருக்குப் பிந்திய சூழலை ஒரு நிலைமாறுகால சூழல் என்று வகைப்படுத்தலாம். தமிழரசியலுக்கும் இந்தச் சூழல் ஒரு நிலைமாறுகால அரசியலுக்குரிய சூழல். தேசிய அரசியலுக்குப் பாரிய சவால்களை ஏற்படுத்தியுள்ள ஒரு சூழல். போராட்டம் முடிவடைந்த விதம், அது தந்த மீள முடியாத வலி, அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களிற்கெதிராகத் தொடுக்கப்பட்டிருக்கும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை, அவ்வினப்படுகொலை மூலம் ஏற்படுத்தப்படுகின்ற நுண்ணிய கூட்டு வலியின் தொடர்ச்சி என்பன எமது கடந்த கால அரசியல் தொடர்பிலான கசப்பாக மாறுகின்ற பயங்கரம் ஏற்படுமோ என்ற அச்சம் மேலோங்கியிருக்கின்ற காலப்பகுதி இது. இச்சூழலை வெளிச் சக்திகள் தத்தமது நிகழ்ச்சித் திட்டங்களிற்குப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். இவர்களுடைய நிகழ்ச்சித்திட்டம் தமிழரசியலைத் தேசிய அரசியலிலிருந்து விலகிச் செல்ல வைக்க[illegible]

தொடர்ச்சி அடுத்த பக்கம்



# நினைவழியா நினைவுகளுடன்...

27 அன்று காலை தொலை பேசி மணி ஒலித்தது
என்றும் இல்லாத கனத்த செய்தி என்
காதுகள் இரைந்து நம்பமறுத்தது.
அருட்பணி தனேந்திரா எம்மைவிட்டு பிரிந்தார் என
ஏற்கமுடியாத செய்தியை ஏற்றுக்கொள்ள
நினைவகலா நினைவுகளை மனதில் சுமந்து
வீட்டிலும் நண்பர்களிடமும் எப்படிசொல்வேன்,
என ஏங்கியதை கூற விழைந்தேன்,
தம்பி தனேந்திரா தவறிவிட்டார் என
கேட்டவர் யாவரும் ஏக்கமுற்று
கலங்கியதே கவலையாகி கண்ணீராக கரைந்தனவே
குறுகிய கால வாழ்வையும்
அர்த்தமுடன் வாழ்ந்து வாழ்வுக்கும் பல
வடிவங்கள் கொடுத்து வாழந்து காட்டிய
துடிப்புள்ள இளைஞன் தூய்மையான துறவை
துணிச்சலுடன் ஏற்று
துன்புறும் மனங்கள் துயர்தீர்க்கும் வழிகாட்டியாய்
பிறர்வாழ்வை பதிவாக்க பலநூல்கள்,
பதிப்பித்தும்,பகிரவைத்தும் பண்பான
உறவு தொடர்புகளால் பலர் மனம்
கவர்ந்தவரை இறைவன் கவர்ந்துகொண்டான்.
வாழ்வின் பொருள் உணர்த்தும்,
அசுர உழைப்பும், அயராத பணியும்
பலரது மனதில் நினைவகலா நினைவை
பதிவாக்கியதால் கலங்கிய மனத்துடன்
கண்ணீர் மல்க கூடிய நட்புகளின்
வார்த்தைகளே சாட்சிகளாகின
சமயங்கடந்து சமூகநேசிப்புடன்
வரலாற்று பதிவுகளை காலத்தேவை உணர்ந்து
களங்களை தனதாக்கி பிறர் உயர்வுக்கு
உரமாக்கும் நூலுருக்களால் உயிர்பூக்கள்
எழுத்துக்களால் எழிலாக தெளிவு ஆகி
கலைமுகங்களின் கருத்தாளம்மிக்க பங்கேற்புடன்
நம்பிக்கை வரிகளாய் தந்தவர் வாழ்வுக்கு
ஏற்பட்ட சவால்கள், சங்கடங்கள், எதையும்
இறைசித்தமாக ஏற்ற பல நினைவுகள்
எமக்கோர் பாடமாக பதிவாக்கியவர்;
பத்திரிகைகள், சஞ்சிகைகள், வெளியீடுகள்,
யாவற்றிலும் தனக்கோர் இடம்சேர்த்து
இசையால் இறைவன் புகழ்ந்திடும்
பாடல்கள் பலபலர் மனங்களை உருக்கும்
பாசத்தின் பண்பாளனாக நம்தேசத்தின் நல்முத்தாக
நம் நினைவகலா நினைவுகளின் பதிவாளனாக
நின் இருப்பை நினைத்து சென்றவரை
நிர்மலனும் கவர்ந்து கொண்டான் என
ஏங்கிய இதயங்களை தாங்கிடும்
இறை அருளோடு இறைவனை இறைஞ்சுவோம்
தனேந்திரா எனும் மானுடத்தின்ஆத்மசாந்திக்காக!

யாழ் பாலன்

# ஏன் வந்தாய் தாயே?



மனிதங்கள் செத்துப்போய்
ஆண்டுத் திதிகள் நான்காய் உருண்டபின்
தசைகளும் பிண்டங்களும் நெக்கியும்
எலும்புக்கூடுகள் உக்கியும் போனபின்
ஏன் வந்தாய் தாயே...! இங்கு

விடுப்புப் பார்க்கவா
சுற்றுலாவாய் பொழுது போக்கவா
விருந்து உண்ணவா வந்தாயா...?

உன்னைத் தமிழச்சி என்று என் சொந்தம்
பெருமைகொண்டதே
உன் தங்கச்சிகள் சிதைக்கப்பட்டபோது
உன் தம்பிகள் காணாமல் போனபோது
உன் சொந்தங்கள் கருவறுக்கப்பட்டபோது
ஏங்கே போனாய் தாயே...!

செம்மையாக்கப்பட்ட வீதிப் பயணங்களுடனும்
அபிவிருத்தித் தரிசிப்புக்களுடனும்
கைலாகு கொடுப்புக்களுடனும் முடிந்துவிடுமா உன்
பயணம்...?

கலியுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண சபைத் தேர்தல் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் நமது முரசொலியுடன் பகிர்ந்து கொண்டவை.

# 13ஆவது திருத்தத்தில் சில திருத்தங்கள் உள்ளன!

வடமாகாண மக்கள் அனைவரும் ஒரு அலகாகச் சேர்ந்து தேர்தலின் முக்கியத்துவத்தையும், தேவையையும் உணர்ந்து வாக்களித்து தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும். மாவட்ட, பிரதேச அலகுகளில் இருந்து மக்கள் மாகாண சபை என்ற அலகுக்குள் வந்துள்ளனர். 1987ல் உருவாக்கப்பட்ட மாகாணசபை முக்கியம் பெற போர் இடம் கொடுக்கவில்லை. தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மக்களின் பாரம்பரிய வாழ்விடம், தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அடிப்படையாக வைத்து தூர நோக்குடன் எமது செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மக்களை மாகாண முறைப்படியும், சனநாயக முறைப்படியும் ஒன்று சேர்க்க இத்தேர்தல் ஒரு காரணமாக அமைகின்றது. 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் எவற்றைப் பெறலாம் என்பது வேறு கேள்வி. இதனை ஒரு கையால் கொடுத்து மறுகையால் பறிக்கும் செயல் என நாம் பலமுறை கூறியுள்ளோம். இங்குள்ள கருத்துக்களை நடைமுறைப்படுத்தத் தடைகள் உள்ளன. முக்கியமாக ஆளுநரின் தடைகள். ஆனால், இவை பற்றியும் பேசித் தீர்க்க முடியும்.

உண்மையில் தமிழ் மக்களிற்கு அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள அரசாங்கமும் ஆட்சியாளர்களும் விரும்பவில்லை. 13வது திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி இந்தியாவுடன் பேச வேண்டியுள்ளது. எமது உரிமைகளையும், உணர்வுகளையும் புரிந்து கொண்டு அவற்றுக்கு மதிப்பளித்து ஆட்சியாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இது இல்லாத பட்சத்தில் எமது இயலாமை காரணமாக சர்வதேச சமூகத்தையும், புலம் பெயர்ந்துள்ள உடன் பிறப்புக்களையும் ஆதரவு தருமாறு கோர வேண்டும். ஆனால் இதற்கு இடமளிக்க விரும்பாது அரசு எமது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் என நம்புகின்றேன்.

முதற் பக்கத் தொடர்ச்சி

- மே 2009ற்குப் பின்னரான சூழலில் தமிழ்த் தேசிய அரசியலானது வெறுமனே அபிலாசை அரசியலாக இல்லாமல், எதிர்ப்பரசியலின் குறியீடாக மட்டுமில்லாமல், ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபட உதவுகின்ற அரசியல் வரையறையாக உருமாற வேண்டுமாயின் அதற்கான ஒரு ஆழமான உரையாடலைச் செய்ய வேண்டியது அவசியமாகும். அந்த உரையாடல் அடிமட்டத்திலிருந்து மேல்நோக்கி நகர்த்தப்படுகின்ற உரையாடலாக இருக்க வேண்டும். அத்தகைய உரையாடல் மூலமாகச் செய்யப்படக் கூடிய மக்கள் அணிதிரட்டலே ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபட உதவுகின்ற அரசியல் வரையறையாக தமிழ்த் தேசிய அரசியல் உருமாற வாய்ப்பளிக்கும்.
- தேசம், சுயநிர்ணயம் என்று பேசுவது தொடர்பில் சர்வதேச சமூகத்தினருக்குப் பிரச்சினைகள் இல்லை. தனிநாடு என்று பேசுவது அவர்களுடைய இன்றைய பூகோள அரசியல் இலக்குகளிற்கு இடைஞ்சலாக இருக்கின்றது. அதன் காரணமாகவே ஆயுதப் போராட்டத்தை நடாத்தியவர்களை ஆரம்பத்தில் தடை செய்தவர்கள் பின்னர் அதனை முடிவிற்குக் கொண்டு வந்தார்கள். ஆயுதப் போராட்டம் மனித உரிமைகளை மதிக்காமல் நடந்து கொண்ட படியால் தான் அழிந்து போனது என்று கூறுவது பிழையான வியாக்கியானம். ஆகவே போருக்குப் பிந்திய சூழலில் தேசம், சுயநிர்ணயம் என்று பேசுவதில் தயக்கம் இருக்கத் தேவையில்லை
- எவ்விதத்திலும் பயனற்ற 13ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தோடு சம்பந்தப்பட்ட மாகாண சபை முறையைத் தீர்விற்கான ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக் கொள்வதன் மூலமாக ஒரு உண்மையான தீர்வை அடைந்து கொள்வதற்கான பாதை அடைபட்டுப் போகும் என்பதனைக் கவனிக்க வேண்டும். குறிப்பாக மாகாண சபை முறைமையை உள்ளக ரீதியாக எமது சுயநிர்ணய உரிமையை நாம் நிலைநாட்டுவதற்கான ஆரம்பப் புள்ளி என்று கூறுவது அபத்தமானது ஆபத்தானது. சுயநிர்ணய உரிமையைக் கோரி வரும் தரப்பு அதனைப் பிரயோகிப்பதற்கான ஒரு நிறுவனத்தை கண்டடைந்து விட்டது என்று நாம் கூறுவதற்கு ஒப்பானதாக அது அமையும்.
- மே 2009 இற்குப் பின்னரான சூழலில் பொதுசன வாக்கெடுப்பைக் கோருவது என்ற உத்தி தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது. பொதுசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாகத் தமிழர்களது அரசியல் தீர்வு செயன்முறை ஒன்றை அணுகுவது என்பது 'சனநாயக ரீதியான முன்வைப்பு'. சனநாயகம் என்ற ஒற்றைச் சுலோகம் தாங்குபவர்கள் இதற்கு மறுப்பு சொல்வது என்பது முடியாத காரியம். ஸ்கொட்லாண்டில், கட்லோனியாவில, மொன்டி நீக்ரோவில், தென்சூடானில் அத்தேசங்களைச் சார்ந்த மக்களுக்கு இந்த சனநாயக வாய்ப்பு இருக்குமென்றால் சர்வதேச அரசியல், குடியியல் பொருத்தனை கூறுகின்ற "தாம் விரும்பும் அரசியல் தெரிவை மேற்கொள்வதற்கான" சுயநிர்ணய உரிமையைச்செயற்படுத்தும் கருவியாக தமிழர்களும் பொதுசனவாக்கெடுப்பைக் கோருவதற்கான தார்மீக உரிமையைக் கொண்டுள்ளனர்.
- தமிழர்களுடைய சுயநிர்ணயப் போராட்டத்தை முன்கொண்டு செல்வதற்கு உள்ளக, வெளியகக் கொள்கைகளில் தெளிவு வேண்டும். வெளியகக் கொள்கை என்பது சர்வதேச சக்திகள் விரும்பியதைச் செய்வது என்றவாறாகவன்றி தமிழர்களது நலன்கள் என்ன என்பதனை முன்வைத்ததாக இருக்க வேண்டும். தமிழ்த் தேசிய நலன் சார் வெளியுறவுக் கொள்கை ஒன்று உருவாக்கம் பெறுதல் வேண்டும். அக்கொள்கை யாரையும் பகை நாடாகக் கருத வேண்டியதில்லை. அக்கொள்கைக்கான அடிப்படைகள் இந்தப் பிராந்தியத்தின் பூகோள அரசியலை விளங்கிக்கொண்டு அதில் தமிழரசியலின் வகிபாகத்தைப் புரிந்து கொண்டு முன்னகர்த்தப்படவேண்டும்.
- "சர்வதேச காய்நகர்த்தல்கள்" மட்டுமே போதுமானதாக இருக்கப் போவதில்லை. இந்த "நகர்த்தல்கள்" சர்வதேச அரங்கில் வெற்றி பெற வேண்டுமானால் அதற்குப் பின்னால் மக்கள் அணிதிரள்வு ஒன்று இருத்தல் வேண்டும். சர்வதேசத்திற்கான அணிதிரட்டல் என்ற நோக்கில் செய்யப்படும் அணிதிரட்டலாகச் சுருங்காமல், நிலை கடந்த வலி, துயரம் என்பதற்குமப்பால் தமது எதிர்காலம் பற்றி சிந்திப்பதற்கான, அதைத் தாமே திட்டமிடுவதற்கான வெளியை உருவாக்குவதற்கான அணிதிரட்டலாக இது இருத்தல் வேண்டும். அந்த வெளி தமிழ்த் தேசிய அரசியல் பற்றிய மீள்-கதையாடலுக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

நினைவுப் பேருரை: - கு.குருபரன்
(விரிவுரையாளர், சட்டத்துறை யாழ். பல்கலைக்கழகம்.)

# கடவுளுடன் ஒரு பேட்டி

ஒரு நாள் கடவுளை பேட்டியெடுப்பதாய் கனவு வந்தது எனக்கு...

"உள்ளே வா" என்று அழைத்த கடவுள், "என்னைப் பேட்டியெடுக்கணுமா?"

"ஆமாம். உங்களுக்கு நேரமிருந்தால் கொடுங்கள்" கடவுள் சிரித்தார்.

"என் நேரம் முடிவற்றது. எதையும் செய்யப் போதுமானது. சரி. என்ன கேட்கப் போகிறாய்?"

"மனித இனத்தில் உங்களை ஆச்சரியப்படுத்துவது எது?"

கடவுள் சொன்னார்."மனிதன் ரொம்ப நாள் குழந்தையா இருக்கப் பிடிக்காமல், சீக்கிரம் வளர்ந்து பெரியவனாகிறான். ஆனால் வளர்ந்த பிறகு குழந்தையாகவே நீண்ட காலம் இருக்கிறான்.

பணத்துக்காக உடல்நலனை இழக்கிறான். பின்னர் இழந்த நலத்தைத் திரும்பப் பெற எல்லாப் பணத்தையும் இழக்கிறான்!

எதிர்காலத்தைப் பற்றியே எப்போதும் கவலையுடன் யோசிப்பதில், இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்காலத்தை மறந்துவிடுகிறான். நிகழ்காலமும் எதிர்காலமும் அவனுக்கு இல்லாமலே போகிறது!

சாகாமல் இருக்க வாழ்கிறான். ஆனால் வாழாமலேயே சாகிறான்."

கடவுளின் கைகள் லேசாக அசைந்தன.. சில நொடிகள் மௌவனம் நிலைவியது.

"ஒரு தந்தையாக, இந்த பூமியில் உள்ள உங்களின் பிள்ளைகளுக்கு சொல்ல விரும்பும் வாழ்க்கைப் பாடம் என்ன?" மீண்டும் கேட்டேன்.

கடவுளிடமிருந்து ஒரு புன்னகை.

"யாரும் உன்னை நேசிக்க வேண்டும் என்று வலுவில் முயற்சிக்காதே. நேசிக்கப்படும் அளவுக்கு நடந்து கொள்.

வாழ்க்கையில் ஒருத்தன் "சம்பாதிச்சது மதிப்புள்ளதல்ல" அதை எப்படிச் சம்பாதிச்சான் என்பதில்தான் அந்த மதிப்பிருக்கு.

ஒன்றைவிட ஒன்று சிறந்ததுன்னு ஒப்பிடுவதே கூடாது.

எல்லாம் இருக்கிறவன் பணக்காரன்னு நினைக்காதே. உண்மையில் யாருக்கு தேவை குறைவோ அவன் தான் பணக்காரன்!

நாம் நேசிக்கும் ஒருத்தரைப் புண்படுத்த சில நொடிகள் போதும். ஆனால் அதை ஆற்ற பல ஆண்டுகள் ஆகும்.

நம்மை நேசிக்கும் பலருக்கு அதைச் சரியாக வெளிப்படுத்தத் தெரியாமல் இருப்பது தான் நிஜம்.


பணம் இருந்தா எல்லாத்தையும் வாங்க முடியும்னு நினைக்கிறது தப்பு, சந்தோஷத்தை ஒருபோதும் வாங்க முடியாது.

இரண்டு பேர் ஒரே விஷயத்தைப் பார்த்தாலும், அவர்கள் பார்க்கும் விதம் வேறுவேறாக இருக்கும் என்பதைப் புரிந்துகொள்.

ஒரு நல்ல நண்பனுக்கு அடையாளம், சக நண்பனைப் பற்றி எல்லாம் தெரிந்து வைத்திருப்பதும். எந்த சூழலிலும் அவனை விரும்புவதுமே!

அடுத்தவனை மன்னிக்கத் தெரிந்தால் மட்டும் போதாது, தன்னைத்தானே மன்னித்துக் கொள்ளும் தன்மையும் வேண்டும்.

நீ சொன்னதை மற்றவர் மறக்கலாம். நீ செய்ததையும் மறந்து போகலாம். ஆனால், உன்னால் பெற்ற உணர்வை ஒருபோதும் அவர்கள் மறக்க மாட்டார்கள்!"



பேட்டி முடிந்தது என்று சொல்லும் விதமாகக் கடவுள் கண்களால் சிரித்தார், அவரது கதவுகள் மூடிக் கொண்டன.

தேவையானது கிடைத்த சந்தோஷத்துடன் விழித்தெழுந்தேன் நான்!

செல்வராஜா டினேசன்
மன்னார்,
யாழ் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு குடையில்



சிறுகதை

# மூவர்

– கீதாகணேஸ்

எல்லோரும் நிரையாக எழுந்து நிற்க இறை பிரார்த்தனையுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. செவிமடுப்பதற்குரிய ஆயத்த வேலையில் செவிகள்.

இறுதித் தவணைக்குரிய ஆரம்பக் கூட்டம். வழக்கம் போலவே பிரதி அதிபர்கள் வரிசையாய் விடயங்களை முன்வைக்க சிங்களத்திலும் மொழிபெயர்க்கப் பட்டது. இலங்கை மாதாவின் மூவின சமூகங்களையும் ஒரு கூரையின் கீழ் வளர்த்துக் கொண்டிருக்கும் பெருமை இந்த வித்தியாலயத்திற்கு. ஒரே நேரத்தில், தேவாரம், ஜெபம், சலவாத், பிரித் இணைந்து ஒலிக்கும். எல்லாமே அமைதியை, அஹிம்சையைப் போதித்தன. கை முக்கிய விடயங்களைக் குறித்துக் கொண்டிருந்தது. கண் முன்னே கடற்கரையோரமாய் உடைந்து போன தோணியில், நாடியில் கை வைத்தபடி எதையோ ஏக்கத்துடன் பார்த்திருக்கும் சிறுவனின் நிழற்படம் மாதக் கலண்டரில் தொங்கிக் கொண்டிருந்தது. நெற்றியில்

> "தமிழ் நல்லாய்க் கதைச்சுப் பழக வேணும்." அவள் தன் மாணவர்களுக்கு அடிக்கடி கூறுவாள். "உங்கட கிளாஸ் விஷ்ணு எப்பவும் சிந்தனைதான். அவனுக்கு மனசில பிரச்சனை இருக்கு மிஸிஸ் சிவசேகரம். அநியாயம் சின்னப் பையன். நல்ல படிப்புக்காறன் தானே. மன்னம்பெரே உள்ளத்தின் வெளிப்பாடுகள் முகத்தில் கொப்பளித்தன."

வழிந்த தலைமுடி. வெறித்துப் பார்த்த பார்வை. ஆனால் வஞ்சகமற்ற வெண்மை உள்ளம். மொத்தத்தில் விஷ்ணுவை நினைவுபடுத்தியது.

அவன் பாடசாலை வந்து ஒரு கிழமையாயினும் ஏனோ அவன் நினைவுகள் சுழற்சியாய் வந்து கொண்டிருந்தன. இருபத்தைந்து பிள்ளைகளிலும் வித்தியாசமானவன். எப்போதும் யோசனைக்குள் மழுங்கடிக்கப்பட்டவன். தலை குனிந்து ஒரு நாளும் அவன் யோசித்ததில்லை. எப்போதும் அண்ணாந்து மேலே பார்த்தே யோசிப்பான். அடிக்கடி கழுத்தில் சுழுக்கியது போல் வலப்புறமும் இடப்புறமும் கழுத்தைத் திருப்புவான். "மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய நீங்களே வேறு சிந்தனைகளுடன் வகுப்புகளுக்குப் பிரவேசிக்காதீர்கள்." என்றதும் எனக்குத்தான் கூறுகிறாரோ? என்று திருமதி சிவசேகரம் விழிப்புற்றார்.

"தயவு செய்து பாடசாலையில் பாடசாலைப் பிரச்சினைகளுக்கு முதன்மை கொடுங்கள்." கூட்டம் நிறைவின் விளிம்பை எட்டிக் கொண்டிருந்தது. திருமதி மன்னம்பெரே அழகாகத் தமிழை உச்சரித்துப் பேசுவாள். "தமிழ் நல்லாக் கதைச்சுப் பழக வேணும்." என்று அவள் தன் மாணவர்களுக்கு அடிக்கடி கூறுவாள். "உங்கட கிளாஸ் விஷ்ணு எப்பவும் சிந்தனைதான். அவனுக்கு மனசில பிரச்சனை இருக்கு மிஸிஸ் சிவசேகரம். பாவம் சின்னப் பையன். நல்ல கெட்டிக்காரன் தானே. மன்னம்பெரே உள்ளத்தின் வெளிப்பாடுகள் முகத்தில் வெளிப்பட்டன."

"நாம் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களால் வேலைகளை இலகுவாக்கினாலும் மனம் சாந்தியில்லாதுவிடின் அவற்றினால் பேரழிவுகளே நிகழும். எல்லாவற்றையும் முயற்சியால் அடையலாம் என்று வலியுறுத்துகின்ற நாமே அமைதியாக பயணிப்பதில் தோற்றுப் போகிறோம். அதன் விரக்திதான் விபரீதமான விளைவுகளோ? இல்லை. ஒவ்வொருவரும் முதலில் தன்னளவில் சாந்தி பெற வேண்டும் அதுதான் பிற மனிதருடன் நேசத்துடன் பழக வைக்கும். புரிந்துணர்வு ஏற்படும். நிலையற்ற இவ்வுலகில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியும்" என்றார். புத்த பகவான். அவரும் ஓர் மானிடர். தெய்வீக குணம் பொருந்தியவர்.

அன்பும் சிவமும் ஒன்றே என்றார் திருமூலர். பஞ்சமா பாதகங்களை ஒழிப்போம் என்கிறது சைவமும் பௌத்தமும். எல்லாமே மேடைப் பேச்சுக்களுக்குப் பொருத்தமான வெறும் சீர்திருத்த கருத்துக்களாகவே இருக்கின்றன. மனிதர்கள் அதன் வழி செல்வதில்லை. எல்லோரும் வெறும் கதிரைச் சண்டைக் காரர்களாகவே இருக்கிறோம் "கதிரைச் சண்டைக்காரர்.......?"

விஷ்ணுவின் பேச்சு திருமதி சிவசேகரத்திற்கு யாரையோ நினைவில் தட்டி விட்டது பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாக இருந்த போது ரத்தினம் பிற மாணவர்களுடன் வம்பிழுப்பான். எப்போதும் கதிரைக்காக முரண்படுவான். தனக்குக் கதிரை கொடுத்து உதவியவன் உயிர்த் துரோகம் செய்யும் விரோதியானாலும் கைகோர்த்துத் திரிந்த நண்பனை விட்டுத் தாவுவான். அண்மையில், அவனுக்கு தன் கட்சியில் ஆசனம் கிடைக்காததால் மற்றைய கட்சிக்குத் தாவியிருப்பதாய் தலைப்புச் செய்தி கூறிற்று.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் விஷ்ணுவின் வகுப்பறைச் சொற்பொழிவு பெரும் பிரசங்கித்தனமாய் இருந்தது. இவனும் நாளைக்கு வெள்ளையாடை பூண்டு கூப்பிய கைகளுடன் என் கதவைத் தட்டுவானோ?

> "ஐயோ! அவன் சரிஞ்..புத்திசாலி. வீட்டுக்காறங்க கவனம் இல்லப் போல. அவன்ட அம்மாவ சரி கூப்பிட்டு கதையுங்க மிஸிஸ் சிவசேகரம்."

தலை இரண்டாகப் பின்னி சிவப்பு நிறத் துண்டினால் கட்டப்பட்டிருந்தது. அம்மாவின் காதுகளில் மினுங்கிக் கொண்டிருந்த சிவப்புக் கல் தோடுகளுக்குப் பதிலாக கறுப்பு நிற பிளாஸ்ரிக் தோடுகள். சிவப்புக் கல் வைத்த தோடு அப்பா விறகு வெட்டி வித்து கலியாண நாள் பரிசாய்த் தந்ததாய் அம்மா அடிக்கடி கூறுவாள். அம்மாவிற்கு எதுவுமே விளங்காது என்பது அவனுக்கு விளங்கவில்லை. பத்துத் தடவைகளுக்கு மேல் "அம்மா" என்றிருப்பான்.

அவன் சிரிப்பதும், கோபாவேசமாய் வெறித்துப் பார்ப்பதுமாய் இருந்தான். "சித்தி அம்மாக்கு நான் விஷ்ணுதான் எண்டு சொல்லுங்களன். இல்லாட்டி டொக்டரிட்டயாவது சொல்லுங்களன்" அவனுக்கு அம்மாவுடன் பேசவேண்டும். இரும்புப் பறவைகள் பிளந்து வீழ்த்தும் போதெல்லாம் பிணந்தின்னிகளுக்கு மனித இறைச்சி மலியும் காலம் அது. உணர்ச்சி மிகு தமிழனின் இறைச்சி, நாவில் சுவையைத் தூண்டுமா? தமிழனின் மூளைக்காய் சண்டையிட்டவர்கள்.

"உன்னையும் அப்பாவையும் சன்னங்கள் ருசித்துப் பார்த்ததில இருந்து அம்மாக்கு மனநிலை குழம்பிற்று. அம்மா மட்டுமில்ல எத்தினயோ பேர் இப்படித்தான். நீ பாவம் உனக்கு இதெல்லாம் விளங்காது."

ஆனால், அவன் எதையோ விளங்கியிருக்க வேணும். புதன்கிழமை. ஒய்வறையில் வழக்கம் போலவே ஏழாம் பாடவேளையில் ஜனா(கு)பா ஹஸனா. திருமதி மன்னம்பெரே, சிவசேகரம் ஆகியோர். "ரீச்சர் நீங்க ஒரு தடவ விஷ்ணுவோட கதைச்சு பாருங்கோ. இல்ல, கவுன்சிலிங் கொடுத்துப் பாக்கிறது மிச்சம் நல்லம்." திருமதி மன்னம்பெரேயின் அடுத்த முயற்சி இது.

"சின்ன வயசில இருந்தே பிள்ளையளுக்கு சமாதானம் சமத்துவம் பற்றி சொல்லிக் கொடுத்தா மனசில பதிஞ்சிடும். உறுதியா எதை நினைக்கிறமோ அதுவாகவே மாறுவம் என்கிறது உளவியல். பரீட்சைக்குப் போட்டி போட்டுப் படிக்கிறதால பிள்ளையளுக்குள்ள ஒரு முரண்பாடு வருகுது. எல்லாமே தனக்குத்தான் வேணும் என்ற மனநிலையைத்தான் நாம போதிக்கிறம். ஜனா(கு)பா ஹஸனா கூறிக்கொண்டிருந்தார்.

"நேற்றைக்குப் புதுசா வந்த வசந்தனுக்கு இடம் இல்லையெண்டு எங்கட கிளாஸ் மலிங்க 'புட்டுவம்' (கதிரை) கொடுத்தான். சில்வா பாதி இடம் கொடுக்க மலிங்க அதில இருந்து படிச்சான்." மன்னம்பெரே குறுக்கிட்டாள். திருமதி சிவசேகரம் விஷ்ணு வகுப்பறையில் நிகழ்த்திய சிற்றுரையின் சாராம்சத்தைக் கூறி, "ஒரு சின்ன வகுப்பில தலைவனா இருக்கிறவன பள்ளிக்கூடம் சரியான வழிநடத்தணும்." என்றாள்

"ஐயோ! அவன் சரியான புத்திசாலி. வீட்டுக்காறங்க கவனம் இல்லப் போல. அவன்ட அம்மாவ சரி கூப்பிட்டு கதையுங்க மிஸிஸ் சிவசேகரம்." மன்னம்பெரேயின் தாழ்மையான விண்ணப்பம்.

நான் இந்த வித்தியாலய மாதாவின் மகனாய் பயில்வதில் பெருமையடைகிறேன். அப்படித்தான் இலங்கை மாதாவின் பிள்ளைகள் நாம என்று மலிங்க, விஷ்ணு, குஷைன் மூண்டு பேரும் பெருமைப்படுறம். பள்ளிக் காலத்தில இப்பிடிச் சேந்து படிக்கிறது ஒவ்வொருத்தரின்ர பிரச்சனையையும் புரிஞ்சு கொள்ள முடியுது. மலிங்க பாவம். யுத்தம் அவன்ட அப்பான்ர சதைப்பிண்டத்தைத் திண்டு இரத்தத்தைக் குடித்தது. ஒரு சிறு குடையில மூண்டு பேரும் நனையாம போவம். எங்களுக்குத் தேவை சமாதானக் கல்வி. இதை ஜதார்த்தமாக்கினா என்ர அப்பாக்கும் அம்மாக்கும் இப்பிடி நடந்திருக்காது. ஏன்? மலிங்கவின்ர அப்பாவும் அவன் நாட்குறிப்பைத் தொடர முடியாமல் மெல்ல மூடும் திருமதி சிவசேகரத்தின் விரல்கள்.

புதன்கிழமை.

ஒய்வறையில் வழக்கம் போலவே ஏழாம் பாடவேளையில் ஜனாபா(கு) ஹஸனா, திருமதி மன்னம்பெரே, சிவசேகரம். விஷ்ணுவின் சித்திரக் கொப்பியை மன்னம்பெரே பார்த்துக் கொண்டிருக்கிறார். பிள்ளையார் சுழி, பௌத்தச்சக்கரம், சிலுவை, பிறை ஒன்றாய் வரையப்பட்ட பட்டம் உயரப் பறக்கிறது. கை கொட்டியபடி மலிங்க, விஷ்ணு, குஷைன், அன்று. தலையிழந்த முண்டங்கள், இரத்தம் வாய்க்கால் விழியாய் ஓடுகிறது, ஆங்காங்கே பிணங்கள், புகை மண்டலம், ஓரமாய் மரத்தினடியில் விழிகளைப் பிதுக்கி கைகளை கூப்பிய பெண். "வேண்டாம்" என்ற இரத்தச் சிவப்பின் தலைப்பை உச்சரிக்கிறார். எதிரே இருந்த விஷ்ணுவின் வகுப்பறையில், விஷ்ணுவின் தோளில் கை போட்டு மலிங்க எதையோ கூறுவதைத் திருமதி சிவசேகரமும் பார்த்துக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரூந்து யன்னலில் ஒரு நிலவு

- அம்பிகா

நகரப் பேரூந்துகளில் ஏறிப் பயணித்திருக்கிறீர்களா? அதில் தினமும் பயணிப்பவரா நீங்கள்? அப்படி என்றால் உங்களுக்கும் விதவிதமான அநுபவங்கள் கிடைத்திருக்கக் கூடும். பேரூந்துப் பயணங்கள் சுவை மிக்கவை. எல்லாப் பயணங்களுமே சுகம்தான் என்றாலும் நீண்ட பேரூந்துப் பயணங்கள் இன்னும் ரசிக்கத்தக்கவை .

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு நீங்கள் 3 விதமாக பயணம் செய்திருக்கக்கூடும். City of Trinco என்ற கப்பலில் வரும்போது கப்பல் மேற் தளத்தில் டைட்டானிக் ஜாக் - ரோஸ் போன்று நின்று கொண்டு கடற் காற்றை ரசித்துக் கொண்டும் வந்திருக்கலாம். கப்பல் திருகோணமலையை நெருங்கும் போது கடலின் நடுவே மலைகள் தென்படத் தொடங்கும் அழகையும் ரசிக்க முடியும்.

விமானத்தில் வந்திருந்தால் யாழ் நகர மத்தியில் இருக்கும் பாழடைந்த புகையிரத நிலையத்திற்கு வந்து விமானக் கம்பனியின் பேரூந்தில் ஏறி புன்னாலைக்கட்டுவானுக்கு வந்து பொதிகளை இறக்கி வைத்தால் அழகிய, முடி எல்லாம் பளபளக்கும் லாப்ரடோர் ஒன்று வரும். அது ஆடிஅசைந்து வந்து; முகர்ந்து பார்த்து விட்டுச் சென்ற பிறகு பொதிகளை எடுத்துக் கொண்டு விரையலாம். ஒருமுறை அந்த லாப்ரடோர் ஒருவரின் பொதியை முகர்ந்து பார்த்து விட்டு அந்த இடத்தை விட்டு நகராமல் பிடிவாதம் பிடித்தது. உடனே அந்தப் பொதி உரிமையாளரை அவசர அவசரமாகக் கூப்பிட்டபோது, பயணிகள் எல்லாம் முகத்தில் ஈ ஆடாமல் காத்திருக்க, அவர் "ஐயா, அந்த பாக் இல கருவாடு இருக்கு" என்று அசடு வழிந்தபடி ஓடி வந்தார்! பிறகு இராணுவ வாகனத்தில் பலாலி வந்து சேர்ந்து விமானத்தில் ஏறினால் ஒன்றரை மணித்தியாலத்துக்குள் கொழும்பு வந்து விடும். நீங்களும் சில வேளைகளில் ராமர் பாலத்தைப் பார்க்க முயன்று தோற்றிருக்கலாம்.

இப்போது தரை மார்க்கமாக கொழும்புக்கு வருபவர்கள் சாவகாசமாக பேரூந்தில் வரலாம். குளிரூட்டிய, குளிரூட்டாத வாகனங்களில் இருந்து சாதாரண அரச பேரூந்து வரை சகல விதமான பேரூந்துகளில் விரும்பியதைத் தேர்வு செய்யலாம். சொகுசுப் பேரூந்துகளில் உலகத் தொலைக்காட்சி வரலாற்றில் முதன் முதலாக திரைக்கு வந்து சில வாரங்களேயான புத்தம் புதிய தமிழ்த் திரைப்படங்களை கண்டுகளிக்கலாம். தலைவா கூட விதிவிலக்கல்ல.

பயணச் சீட்டை சில நாட்களுக்கு முன்பே பெற்றுக் கொண்டாலும் நீங்கள் வரும் போது அந்த இருக்கையில் வேறு யாராவது உட்கார்ந்திருக்கலாம். அந்தக் குளறுபடிகளை எல்லாம் சரிசெய்து ஆசனத்தில் சாய்ந்து கொண்டால் ஜன்னல் ஓரம் கூடவே பயணிக்கும் நிலவை நீங்களும் கவனித்திருக்கக் கூடும். பக்கத்து இருக்கைப் பயணியை கடவுள் தான் அனுப்பி வைக்கிறார் (ஆத்திக வாதிகளின் பார்வையில்). இனிய சுபாவம் கொண்டவராக இருந்தால் உங்கள் பயணமும் இனிதாக அமையும். குறட்டை விடுபவராகவோ, முறிகண்டியில் கச்சான் வாங்கி உங்களுக்கு சத்தம் கேட்கும் படியாக பல்லால் உடைத்துச் சாப்பிட்டு விட்டுக் கோதுகளை தயவு தாட்சண்யம் இல்லது பேரூந்து எங்கும் இறைப்பவராகவோ, பெரிய பொதியை கொண்டு வந்து உங்களின் கால்களுக்கு இடையில் தள்ளி விடுபவராகவோ இருந்து விட்டால், அந்தப் பயணம் உங்களுக்கு நரகம்தான்

நிலவு தொடர்ந்து வரும் போது கூடவே பேரூந்தினுள் இளையராஜாவின் பாடல்களும் ஒலிக்கும் போது அந்த சுகத்தை நீங்களும் அனுபவித்திருக்க கூடும். சில வேளைகளில்" என் கண்மணி...என் காதலி..." என்று சிவகுமாரும் இன்னொரு பெண்ணும் பேரூந்தில் இருந்து எழுந்து வந்து பாடும் அந்த பாடல் நினைவுக்கு வரக் கூடும். இரவு நேரம் என்ற படியால் கூடுதலாக சோகப் பாடல்கள் தான் ஒலிக்கும். பொதுவாக ஜன்னல் இருக்கைக்கு அடிபடுபவர்கள் தான் அதிகம். சாய்ந்து கொண்டு, மரங்களின் இலைகள் உரச, காற்று சில்லென்று முகத்தில் அடிக்க பயணிக்க விரும்புபவர்களுக்கு ஜன்னல் ஓரம் ஒரு சொர்க்கம். பேரூந்து புறப்பட்டு கொஞ்ச நேரத்துக்குள் ஒவ்வொருவரும் பொதுவான உலகத்தில் இருந்து விடுபட்டு தனித் தனி மனதுக்குள் ஆழ்ந்து விடுவார்கள். செத்த வீட்டுக்கு போகும் சொந்தக் காரர்கள் முதல் விடுமுறைக்குப் போகும் கும்பல் வரை சமரசம் உலாவும் இடமாக காட்சியளிக்கும்.

மெல்ல மெல்ல விடியத் தொடங்கியதும் இளையராஜா போய் தேவா வந்து விடுவார். பேரூந்தின் குலுக்கலுக்கு கானா பாடல்கள் பொருத்தமாக இருப்பதாகவே தோன்றும். கொழும்பு நகருக்குள் வந்து விட்டாலோ யாழ் நகருக்குள் போய் விட்டாலோ ஒவ்வொரு இடங்களிலும் பொதியை வாங்கிக் கொள்ளத் தயாராக உறவினர்கள் நிற்பார்கள். தமக்குரிய இடங்கள் வரும்போது ஒவ்வொருவரும் அவரவர் பாட்டில் இறங்கிப் போய்; வாகனம் பிடித்து வீடுகளில் போய் இறங்கினால், பக்கத்து இருக்கை பயணியின் முகம்கூட ஞாபகம் இருக்காது.

வாழ்க்கை என்ற பேரூந்துப் பயணத்தில் இறங்க வேண்டிய இடம் வரும் வரைக்கும் எல்லோரும் தொடர்ந்து பயணிக்க வேண்டியது தான்...! ( பக்கத்து இருக்கைப் பயணியை மட்டும் பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் ஏற்கனவே தேர்ந்தெடுத்துக் கொண்டு விட்டவர்கள், மன்னிக்கவும்)

## நிலவுப் பறவை

எங்கோ இருந்தபடி
என்னை அசைக்கும் இசையே
எனக்குள் இருந்தபடி
என்னைத் தொலைக்கும் கவியே
கண்களுக்குள் ஊர்வலம் - அதில்
காண்பதெல்லாம் உன் முகம்.

உன்னை அடிக்கடி
வெண்முகில்தான் மறைத்திடுமே
உன்னை தேடித்தேடி
முற்றத்துச் செடிதான் வாடிடுமே

பாடுவதற்கு குயிலாயிருக்கையில்
குரல்வளை அறுத்து
குருதி குடிக்கின்றார்கள்
கூடுகளில் முட்டையிடுகையில்
வேற்றினம் அடைகாத்து
என் குருதியில் உயிர் பெறுகின்றார்கள்.

தனித்துப் பறக்கும் நிலவுப் பறவை
நினைத்தாலும்
நிலம் வர முடியவில்லை.
துணிவுகொண்டு நிலவினருகில்
சிறகடிக்கும் குஞ்சுகளை
பிராந்துகளும்தான் விடுவதில்லை.

மண்ணில் - தீய மனங்களில்
சுயநலம் இருப்பதால்தான்
ஒருவன் முன்னேறுகின்றான் - அடுத்தவன்
வீழ்வதும் புரியாமல்.

தன்னலம் கருதா நிலவுப் பறவை –
ஊருக்கெல்லாம் ஒளி கொடுக்கின்றது - துணை
உறவுகளிற்கும் உயிர் கொடுக்கின்றது.

நிலவை வீழ்த்த முயல்கின்றனர். – ஆயினும்
தோற்கின்றனர்.

நிலவு தேய்ந்து போனாலும்
ஓய்ந்து போவதில்லை
ஒளி கொடுப்பதில்....

ஜோ.ஜஸ்ரின்
கொழும்புத்துறை

## தோப்புக்கரணம் போடுதல் நல்லது !

சர்வதேசப் புகழ்பெற்ற அமெரிக்காவின் யேல் மருத்துவப் பல்கலைக்கழகம் தோப்புக்கரணத்தின் நன்மைகள் பற்றி ஆய்வு செய்துள்ளார்கள்.

தினமும் காலையில் 20 முறை தோப்புக்கரணம் போட்டால் போதுமாம். காது மடல்களைப் பிடித்து நெற்றியில் குட்டிக் கொள்ளும்போது. நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இயங்கலாம். மூளையின் இரத்த ஓட்டம் சீராகி ஞாபக சக்தியும் அதிகரிக்கும் எனக் கூறியுள்ளனர்.

இதனால்தான் தோப்புக்கரணம் பள்ளிகளில் நம் முன்னோர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கலாம் என்று தோன்றுகிறது. படிக்காத மாணவர்கள் தோப்புக்கரண முறையால் தண்டிக்கப்படுவதன் மூலம் அவர்களது அறிவுத்திறன் அதிகரிக்க வழியும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. தோப்புக்கரணம் போடுவது நல்லது தானே?

## நினைவிருக்கிறதா என்னை...?

உன் அப்பனை எனக்குத் தெரியும்
உன் அப்பனின் அப்பனை நினைவிருக்கின்றது..
நீ பிறந்த சேதி உன் பேத்திக்குச் சொல்ல
உன் மாமன் ஓடிவந்து
சைக்கிள் சாத்தியதும் நினைவிருக்கிறது..
உன் தங்கை சடங்குக்கு இலை வைக்கவென
உன் மச்சான் காதல் வீறாப்பில்
ஓடி ஏறி கால் தவறி கீழ் விழ்ந்ததும்
கடைசி வரை மறக்காமல் நினைவிருக்கு
கனடாவால் வந்த உன் தங்கை மகள்
ஊஞ்சலாட கயிறு கட்டியதும் நினைவிருக்கு
போர் சூழந்த பொழுதொன்றில்
வானம் உமிழ்ந்த கற்களை நான் தாங்கி
உங்கள் தலை காத்ததும் நினைவிருக்கு
சமாதான காலத்தில் வந்த உன் நண்பர்கள்
உன்னை நான் தந்த கனியால் நினைவு கொள்வது
அடிக்கடி நீ சொல்லிக் கேட்டு நினைவிருக்கு
இப்படி எத்தனையோ எத்தனையோ இன்னும் இன்னும்
நன்றாக நினைவிருக்கு ஆனால்
உனக்கு ஏதும் நினைவற்று,
போன வருடம் என் முதற்பிறந்தவளை
வீதி அகலிப்பால்விருப்புடன் விற்று
வீதியால் போன பிளாஸ்ரிக் கதிரை வாங்கிப் போட்டாய்
இன்று என்னை வீடு அகலிப்பு என
வேரோடு களைய விண்ணப்பம் செய்திருக்கிறாய்
என் செய்வேன்.. என் விதி இன்னும் சிலநாளோ..



-சர்வேஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"சில பிரதேச செயலகங்களில் பட்டதாரிப்பயிலுனர்களுக்கான கடமைகள் முருங்கைக்கண்டு, பப்பாசிக்கண்டு வழங்குதலும், வழங்கப்படாமல் இருக்கின்ற மேலதிக பயிர்களை வாடிவிடாமல் நீர் ஊற்றுதலும் அது தொடர்பான முன்னேற்ற அறிக்கையை வழங்குதலும் ஏற்கனவே வழங்கப்பட்ட பயிர்வகைகள் விலங்கினங்களை நல்ல நிலையில் மக்கள் பராமரிக்கின்றார்களா என வீடு வீடாகச் சென்று ஆய்வு செய்து அறிக்கையிடலும் ஆகும். இவ் வேலையைச் செய்வதற்கு நான்கு வருடங்கள் பல்கலைக்கழகத்தில் கற்க வேண்டுமா என சில பட்டதாரிகள் ஆதங்கப் படுகின்றார்கள்"



இது சுப்பிரமணியம் தவபாலசிங்கம் என்பவரினால் தனது முகப்புத்தகத்தில் அண்மையில் எழுதப்பட்ட ஆதங்கம். தவபாலசிங்கம் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர். தவபாலன் எனப் பலராலும் அறியப்பட்டவர். தமிழ்த் தேசியத்துக்காக குரல்கொடுத்தவர் என்பதற்காக யாழ்ப்பாணம் பழம் வீதியில் வைத்து இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டு பல பத்திரிகைகளின் முகப்புச் செய்தியாக பிரசுரிக்கப்பட்ட பிரபலத்துக்குரியவர். தற்போது மாதாந்தம் பத்தாயிரம் ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவு எனும் அடிப்படையில் கடந்த வருடம் அரசினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிப்பயிலுனர்களில் ஒருவராக பணியாற்றிக்கொண்டிருப்பவர். இந்தப் பின்னணியில் அவரால் முகப்புத்தகத்தில் எழுதப்பட்ட கருத்து அதிக கவணத்துக்குரியது என்பது மறுப்பதற்கில்லை.

**மூவாயிரத்துக்கும் அதிகமானோர் கருத்தக்களவு இலகுவாக அமைக்கப்பட்ட குறித்த பரீட்சையின் பொதுஅறிவு வினாத்தாளில் சித்தியடைவதற்கான ஆக்ககுறைந்த புள்ளிகளான நாற்பது புள்ளிகளைப் பெறத்தவறியிருந்தனர்.**

நல்ல தொழில் வாய்ப்புக்களை குறிப்பாக அரசநியமனங்களைத் தவற விட்டுவிட்டு தமக்கு ஏதாவது அரச வேலைதரும்படி அரசியல்வாதிகளின் அலுவலகங்களுக்கும் அவர்களின் பின்பற்றுனர்களாகத் தம்மை பிரகடனப்படுத்திக்கொள்வோர் பின்னாலும் அலையவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

போட்டிப்பரீட்சைகளையும் அதனைத் தொடர்ந்தான நேர்முகத்தேர்வுகளையும் நடாத்தி பட்டதாரிகள் பலரை உள்வாங்கியுள்ளன. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு உதவிப்பதிவாளர்கள் நியமனத்துக்கான விண்ணப்பங்களைப் பட்டதாரிகளிடமிருந்து கோரியுள்ளதுடன் வடக்கு மாகாண சபை கணக்காளர் சேவைக்கான பரீட்சை ஒன்றை நடாத்தி அதன் முடிவுகளின் அடிப்படையில் பட்டதாரிகளை எதிர்வரும் நாள்களில் உள்வாங்க உள்ளமையும் குறிப்பிடத்தக்கன. மேலதிக மாவட்ட உதவிப்பதிவாளர்களை உள்ளீர்ப்புச் செய்து கொள்வதற்கான பரீட்சை நிறைவுபெற்று; நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான நியமனங்கள் அனைத்தும் பட்டதாரிகள் எனும் தகுதி உடையவர்கள் திறமை அடிப்படையில் பெற்றுக்கொள்ளத்தக்கதாக இருந்த பட்டதாரிப் பயிலுனர் நியமனத்துக்குப் பின்னான அரச வேலைவாய்ப்புக்கள் ஆகும்.

எனவே, மேற்குறிப்பிடப் பட்ட கருத்துக்களின் பின்னணியில் ஒரு விடயம் புலனாகின்றது. அதாவது டார்வீனின் கூர்ப்புக் கொள்கையின்படி தக்கன பிழைக்க, தகாதன மடியும் என்பதாகும். இக்கூற்றை சில பட்டதாரிகள் தக்கனவற்றுக்கு உள்ள தராதரமாக "அரசியல் செல்வாக்கு" "உள்ளால வேலை பார்த்தல்" என்பவற்றைத் தமது

# பட்டதாரிப் பயிலுநர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களா?
# நியாயமான கேள்வி? ஆனால்...

1. தமிழ்த் தேசியம் பேசுகின்ற பட்டதாரிகள் ஏன் பட்டதாரிப்பயிலுனர்களாக இணைந்து கொண்டார்கள்?
2. பட்டதாரிப்பயிலுனர்கள் என வேலையற்ற பட்டதாரிகள் ஒட்டுமொத்தமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னணி என்ன?
3. பட்டதாரிப் பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்கு காரணம் என்ன?

இவ்விடயங்கள் குறித்து ஆராய்கின்றபோது முதலாம் வினாவுக்கான விடையாக கடந்த வாரம் இதே இடத்தில் எழுதப்பட்ட கட்டுரை எமது பல்கலைக்கழகங்கள் உற்பத்தி செய்கின்ற பட்டதாரிகளின் திறன்குறித்து சில நியாயமான கேள்விகளை எழுப்பியிருந்தது. அக்கேள்விகள் தற்போது மேற்சொன்ன ஆதங்கத்துக்கு பதில் சொல்வதாக அமையலாம்.

அத்துடன் மேற்குறித்த விடயத்துக்குச் சான்றாதாரமாக இன்னுமோர் விடயத்தையும் குறிப்பிடுவது பொருத்தமானதாகவிருக்கும். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வடமாகாண சபை, நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களை சேர்த்துக்கொள்வதற்காக பரீட்சை ஒன்றை நடாத்தியிருந்தது. வடமாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட பட்டதாரிகளை மட்டும் மையப்படுத்தி நடாத்தப்பட்ட இப் பரீட்சைக்கு ஏறக்குறைய நாலாயிரம் பட்டதாரிகள் தோற்றியிருந்தனர். அவர்களுள் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் கருத்தக்களவு இலகுவாக அமைக்கப்பட்ட அக்குறித்த பரீட்சையின் பொதுஅறிவு வினாத்தாளில் சித்தியடைவதற்கான ஆக்ககுறைந்த புள்ளிகளான நாற்பது புள்ளிகளைப்பெறத்தவறியிருந்தனர். இவ் விடயம் பத்திரிகைகளில் பகிரங்கமாக வெளியிடப்பட்டதுடன் எமது பட்டதாரிகளின் திறன்கள் குறித்த மிகப்பெரிய கேள்வியையும் கவலையையும் தோற்றுவித்தும் இருந்தது.

அதாவது, எமது பட்டதாரிகள் தமது துறைசார் பட்டப்படிப்பு தவிர ஏனைய விடயங்களில் மிகக்குறைவான திறனுடையவர்களாகவே இருக்கின்றார்கள். இதனால் அவர்கள் தமக்கான, தாமாக, எந்த செல்வாக்கும் இன்றி பெற்றுக்கொள்ளக்கூடிய பட்டதாரிப் பயிலுனர்களாக உள்ளோர் ஆத்திரப்படாது இக்கருத்தை ஏற்றுக்கொள்ள இன்னும் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதாவது பட்டதாரிப்பயிலுனர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் பல அரச வேலைவாய்ப்புக்களுக்கு பரீட்சைகள் நடாத்தப்பட்டு நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. அரச வேலைவாய்ப்பின் அதியுயர்வாகக் கருதப்படும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கல்வி நிர்வாக சேவை, இலங்கைத் திட்டமிடல் சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை வெளிநாட்டு சேவை, இலங்கை விஞ்ஞானச் சேவை என தீவளாவிய சேவைகளுக்கான பரீட்சைகள் நடாத்தப்பட்டு; நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி ஆசிரிய சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆயிரம் பாடசாலைத் திட்டம், தேசிய பாடசாலைகளுக்கான ஆசிரிய நியமனம், வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கான ஆசிரிய நியமனம் என ஆசிரிய சேவைக்கான பரீட்சைகளும் நடைபெற்று சித்தியடைந்தவர்களுக்கு நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. திறமை அடிப்படையிலான இப் பரீட்சைகளில் சித்திபெற்று பல பட்டதரிப்பயிலுனர்கள் நிரந்தர நியமனமும் பெற்றுள்ளனர்.

க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளை அடிப் படையாகக் கொண்டு கிராமசேவையாளர்,

**தமக்கு ஏதாவது அரச வேலைதரும்படி அரசியல்வாதிகளின் அலுவலகங்களுக்கும் அவர்களின் பின்பற்றுனர்களாக தம்மை பிரகடனப்படுத்திக்கொள்வோர் பின்னாலும் அலையவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள்.**

முகாமைத்துவ உதவியாளர் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டாலும், நிரந்தர அரச நியமனம் எனும் அடிப்படையில் இப்பதவிகளுக்கும் அநேக பட்டதாரிகள் திறமை அடிப்படையில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இலங்கை மத்திய வங்கி உட்பட அரச வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் என்பனவும் பகிரங்க விளம்பரங்கள் மூலமாக பட்டதாரிகளுக்கு இயலாமைத் தனத்தினால் குறிப்பிட முடியும். அது எமது இனத்தின் இயல்பு. ஆனால் இவ்வியல்பை மாற்றி எமது பின்னடைவுகளுக்கு உண்மைக் காரணங்களைக் கண்டறிந்து எம்மைத் தயார்ப்படுத்தாது விடுவோமாக இருந்தால் தனிப்பட்ட எதிர்காலமும், இனத்தின் எதிர்காலமும் மிகக் கடுமையானதாகவும் சவால் மிக்கதாகவும் அமையலாம். இக் கருத்துக்களை இப் பத்தியில் ஆரம்பத்தில் எழுப்பப்பட்ட முதலாம் வினாவுக்கான விடையாகக் கொள்ளலாம்.

இரண்டாவது கேள்வி குறித்து ஆராய்கின்றபோது ஏன் பட்டதாரிகள் எந்தவிதமான திட்டமிடலும் இன்றி ஆயிரக்கணக்கில் உள்வாங்கப்பட்டார்கள் என்பது குறித்த தெளிவு முக்கியமானது. அதற்குத் துணையாக தவபாலனின் கருத்துக்கு அவரது முகப்புத்தகத்தில் கருத்து வெளியிட்ட அவரது நண்பர் சசிக்குமார் சசி என்பவரது "ஆசியாவின் ஆச்சரியம்" என்ற கருத்தை நாம் குறிப்பிட முடியும்.

ஒரு நாடு தனது அபிவிருத்தி வளர்ச்சி வீதத்தை உயர்த்திக்கொள்வதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றுள் வேலையற்றோர் வீதம் குறைவாக இருக்கவேண்டியது அவசியமானது. எனவே ஆசியாவின் ஆச்சரியம் என்கின்ற தற்போதைய அரசின் கனவுக்குற்குத் தடையாக இருந்த வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை பட்டதாரிப்பயிலுனர்கள் நியமனத்தின் மூலமாக இல்லாமல் செய்யப்பட்டு தற்போது நாடு தனது அபிவிருத்தியில் முன்னோக்கிச் செல்வதாக மத்தியவங்கி அறிக்கை உள்ளிட்ட புள்ளிவிபரங்கள் வாயிலாக உலகுக்கு காட்டப்படுகின்றது. இப் புள்ளிவிபரங்ள குறித்தும் பல கேள்விகள் இருப்பினும் இப்பத்தியின் நோக்கத்துக்கு அது தேவையற்றது என்பதால் தவிர்க்கப்படுகின்றது. இப்போது பட்டதாரிப் பயிலுனர் ஆட்சேர்ப்பின் இரகசியம் ஓரளவுக்கு இப் பத்தியை வாசிப்போருக்கு புரிந்திருக்கும்.

மூன்றாவது வினாவுக்கான விடை நிதானமாக ஆழமாக ஆராயப்படவேண்டியது என்பதால் அடுத்த வார முரசொலியில் இதே இடத்தில் சந்திப்போம்.

**பல்லவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1999ம் ஆண்டின் 37ம் இலக்கப் பராமரிப்புச் சட்டம்



ஜே.பி.ஏ.

**தம்மைப் பராமரித்துக் கொள்ள இயலாதவர்களாகிய பிள்ளைகள், பராயமடைந்த வழித்தோன்றல்கள், ஊனமுற்ற வழித்தோன்றல்கள், வாழ்க்கைத் துணைகள் தமது வாழ்க்கைக்குத் தேவையான பராமரிப்புத் தொகையை தமது பெற்றோரிடம், வாழ்க்கைத்துணையிடம் பெற்றுக் கொள்ளுவதற்கான ஏற்பாடுகளை இச்சட்டம் வழங்கி நிற்கின்றது.**

**பராமரிப்பிற்கான விண்ணப்பம்**

இச்சட்டத்தின் கீழ், புறக்கணிக்கப்படுகின்ற வாழ்க்கைத்துணை தனது வாழ்க்கைத் துணைக்கு எதிராகவும், தன்னைப் பராமரித்துக் கொள்ள இயலாத பிள்ளை, தன்னைப் பராமரித்துக்கொள்ள இயலாத பராயமடைந்த வழித்தோன்றல் (வயதுவந்த பிள்ளை), தன்னைப் பராமரித்துக்கொள்ள இயலாத ஊனமுற்ற பிள்ளைகள் ஆகியோர் தங்களின் பெற்றோர்களிடம் பராமரிப்புத் தொகை ஒன்றினை வேண்டி நிற்கலாம்.

**விண்ணப்பம் செய்யக்கூடியவர்கள் யாவர்?**

- போதிய வசதியிருந்தும் தனது வாழ்க்கைத்துணையைப் புறக்கணிக்கின்றபோது அல்லது பராமரிக்கத் தவறுகின்றபோது, அவ்வாறான வசதியற்ற வாழ்க்கைத்துணை விண்ணப்பம் செய்யலாம்.

- போதிய வசதியுடைய பெற்றார் ஒருவர், தன்னைப் பராமித்துக் கொள்ள இயலாத தமது பிள்ளையைப் புறக்கணிக்கின்றபோது அல்லது அப்பிள்ளையைப் பராமரிக்கத் தவறுகின்றபோது, அப்பிள்ளை பராமரிப்பை வேண்டி விண்ணப்பம் செய்யலாம். (பிள்ளை யென்பது பதினெட்டுக்கு வயதுக்குக் குறைந்த, மணஞ்சார் அல்லது மணஞ்சாராத அல்லது மகவேற்பு செய்யப்பட்ட பிள்ளையைக் குறிக்கின்றது)

- போதிய வசதியுடைய பெற்றார் தன்னைப் பராமித்துக்கொள்ள இயலாத பராயமடைந்த வழித்தோன்றலை (வயது வந்த பிள்ளைகளைப்) புறக்கணிக்கின்றபோது அல்லது பராமரிக்கத் தவறுகின்றபோது, அப்பிள்ளை பராமரிப்பை வேண்டி விண்ணப்பம் செய்யலாம். பராயமடைந்த வழித்தோன்றலானது பதினெட்டு அல்லது பதினெட்டு வயதிற்கு அதிகமான அத்துடன் இருபத்தி ஐந்துக்குக் குறைவான வயதுடைய பிள்ளைகளைக் குறிக்கின்றது.

- போதிய வசதியுடைய பெற்றார் தன்னைப் பராமித்துக்கொள்ள இயலாத ஊனமுற்ற பிள்ளையைப் புறக்கணிக்கின்றபோது அல்லது பராமரிக்கத் தவறுகின்றபோது, அப்பிள்ளை பராமரிப்பை வேண்டி விண்ணப்பம் செய்யலாம். (ஊனமுற்ற பிள்ளையென்பது, எத்தகைய வயதைக் கொண்டிருப்பினும், தனது வாழ்க்கைப் பிழைப்பைத் தேடிக்கொள்ளுவதற்கு, அல்லது போதுமான அளவுக்கு தனது ஆகாரத்தைத் தேடிக்கொள்வதற்கு உடல்ரீதியாக அல்லது உளரீதியாக ஆற்றல் இல்லாமல் இருக்கின்ற அல்லது ஆற்றல் இல்லாமல் வரக்கூடியவாறு காணப்படுகின்றவர்களைக் குறிக்கும்.

இவ்வாறான விண்ணப்பம் ஒன்று நீதிமன்றிற்குச் செய்யப்படும்போது, அவ்வாறான புறக்கணிப்பு, நியாயமற்ற மறுப்பு நிரூபிக்கப்படுகின்றதன் பேரில், அவரின் வருமானத்தையும், வசதிகளையும் கருத்திற்கொண்டு, மாதாந்தம் வருமானத்தின் குறித்த வீதத்தில் பராமரிப்புக்கு மாதாந்தப் படியாகச் செலுத்துமாறு நீதிவானால் கட்டளை வழங்கப்படலாம்.

விண்ணப்பம்செய்யும்வாழ்க்கைத்துணைசோரவாழ்க்கை(வேறு ஒருவருடன் சேர்ந்து வாழ்தல்) நடாத்திக் கொண்டிருந்தால் அல்லது வாழ்கைத்துணை இருவரினதும் சம்மத்தின்பேரில் பிரிந்து வாழ்ந்தால் அவ்வாறான கட்டளையை நீதிமன்றம் வழங்க முடியாது.

மனஞ்சாராத (திருமண உறவிற்கு வெளியே பிறந்த) பிள்ளையொன்றின், பராயமடைந்த அல்லது ஊனமுற்ற பிள்ளையொன்றின் விண்ணப்பம் தொடர்பில் நம்பத்தகுந்த சான்றின் மூலம் பெற்றோராண்மை (பெற்றார் யாரென்பது) நீதிவான் திருப்திப்படும் வகையில் நிரூபிக்கப்பட்டாலன்றி அவ்வாறான கட்டளையை வழங்க முடியாது.

**விண்ணப்பிக்கும் முறை**

- பிள்ளையின் அல்லது ஊனமுற்ற பிள்ளையொன்றிற்கான விண்ணப்பத்தை அப்பிள்ளையினால் அல்லது அப்பிள்ளையைப் பராமரிக்கும் ஆளினால்

- பராயமடைந்த பிள்ளையின் விண்ணப்பம் அப்பிள்ளையினால், அவ்வாறு விண்ணப்பிக்கும் ஆற்றல் இல்லாதவிடத்து வேறு ஆளினால்

- வாழ்க்கைத்துணையின் விண்ணப்பம் அத்தகைய வாழ்க்கைத் துணையினால், அவ்வாறு விண்ணப்பிக்கும் ஆற்றல் இல்லாதவிடத்து வேறு ஆளினால் விண்ணப்பிக்க முடியும்.

பராமரிப்புக்கான விண்ணப்பமானது எந்த நீதிமன்றின் நியாயாதிக்கத்துக்குள் விண்ணப்பிக்கும் ஆள் அல்லது எந்த ஆளுக்கு எதிராக விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்நபர் வசிக்கின்றாரோ அந்த எல்லையின் நீதிவான் நீதிமன்றிற்குச் செய்யப்படலாம்.

**கட்டளையை வழங்குவதற்கான விசாரனையை ஆரம்பித்தல்**

தாபரிப்புக் கட்டளைக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விண்ணப்பத்துக்கு ஆதாரமாக நிகழ்வுகளைக் கூறுகின்ற சத்தியக் கடதாசியுடன் இணைத்துச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சத்தியக்கடதாசியில் கூறப்பட்டுள்ள விடயங்கள் போதுமானவை என்று நீதிவான் திருப்திப்பட்டால், அவ்விண்ணப்பம் யாருக்கு எதிராகச் செய்யப்பட்டதோ அந்நபரை நீதிமன்றின் முன் தோன்றி விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுவதற்குத் தடையிருப்பின் அதை எடுத்துக்கூறுமாறு அழைப்பு விடுக்கலாம். சத்தியக்கடதாசியின் பிரதியொன்றுடன் இணைத்து நீதிமன்றம் அழைப்பாணைக் கட்டளையை பிரதிவாதிக்கு அனுப்பலாம். அதேநேரம், இவ்வாறு விண்ணப்பம் ஒன்று கிடைக்கப்பெற்றதும் நீதிவான் தனது தற்றுணிவின்பேரில் மாதாந்த படிக்கொடுப்பனவுக்கான இடைக்காலக் கட்டளையொன்றை வழங்கலாம். இக்கட்டளை விண்ணப்பத்தின் மீது இறுதிக்கட்டளை ஆக்கப்படும் வரை தொடர்ந்து செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

நீதிவான் அவசியம் என்று கருதுகின்றவாறான விசாரனைகளை நடாத்தி முடித்த பின்பு விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிராகரித்தல் பற்றிய இறுதிக் கட்டளையை வழங்குதல் வேண்டும்.

விண்ணப்பம் எவருக்கு எதிராகச் செய்யப்பட்டதோ அவ்வாளின் சமூகமளித்தலை அத்துடன் சமூகம் தந்து சாட்சியமளிப்பதற்கு அவ்வாளுக்கு அல்லது எவரேனுமாளுக்கு அழைப்பு விடுப்பதற்கு, அத்துடன் விசாரனையின் நோக்கங்களுக்காக அவசியமான ஆவணங்களை முன்வைப்பதற்குக் கட்டாயப்படுத்துவதற்கு 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 5ஆம் மற்றும் 6ஆம் அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். யாரேனுமொருவர் வழக்கு நடவடிக்கைகளுக்குச் சமூகளிக்கத் தவறின் இச்சட்டக் கோவையின்கீழ் நடவடிக்கைகளையும் எடுக்கலாம்.

**கட்டளையை மீறுதல்**

நீதிமன்றின் கட்டளையை மீறிநடத்தல், அதனோடு இணங்கி நடத்தலை அசட்டை செய்தல், தவனைப்பணத்தைச் செலுத்தத் தவறுதல் ஆகியன தண்டனைக்குரிய குற்றமாகும். ஒரு மாதத்திற்கு நீடிக்கக்கூடிய சாதாரண அல்லது கடூழியத் தண்டனையை வழங்கமுடியும். அவ்வாறு சிறைத்தண்டனை வழங்கப்படுவதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய தவணைப்பணத்தைச் செலுத்துவதற்கானதொரு கட்டளையையும் நீதிமன்றம் வழங்கமுடியும்.

இரண்டு மாதத்திற்கு மேலான காலப்பகுதிக்கு பிரதிவாதியொருவர், செலுத்த வேண்டிய பராமரிப்புத் தவனைத் தொகையைச் செலுத்தத் தவறின், இதுகுறித்து நீதிவானுக்குத் தெரியப்படுத்தப்படும்போது, விசாரனையின் பின்னர், பிரதிவாதியின் சம்பளத்துக்கான நடுக்கட்டல் கட்டளையொன்றினை (சம்பளத்தைப் பிடித்து வைத்தல் என்று அழைக்கப்படும்) அவரின் தொழில் வழங்குணருக்கு வழங்கி, அவ்வாறான கட்டளைக்கிணங்க, குறித்த தொகையை நீதிமன்றம் குறிப்பிடும் காலம்வரைக்கும் கழித்து வைத்து, அத்தொகையை நீதிமன்றம் ஏற்பாடும் செய்யும் வழிமுறையில் விண்ணப்பத்தாரிக்குப் பராமரிப்புத்தொகையாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யமுடியும். இந்தக் கட்டளையினை வழங்குகையில், பிரதிவாதி வேண்டுமென்ற மறுப்பினால் அல்லது குற்றமுடைய அசட்டையின் காரணமாக அல்ல என்று கண்டறிந்தால் இவ்வாறான கட்டளையினை நீதிமன்றம் வழங்குதலாகாது. சம்பள நடுக்கட்டல் கட்டளை தொழில்தருணருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட 14 நாட்களின் பின்னரே அது செல்லுபடிக்கு வருதல் வேண்டும். நீதிமன்றத்தின் இக்கட்டளையினால் பாதிக்கப்படுகின்ற எவரும் மகாண-மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யமுடியும். நீதிமன்றத்தின் இக்கட்டளையை தொழில்தருணர் எவரும் மீறுவது குற்றம் என்பதுடன், நிரூபிக்கப்பட்டதன் பேரில், முதலாவது சந்தப்பத்தில் தவறுகின்ற போது 500ரூபாவும், இரண்டாம் தடவையின் போது 1000ரூபாவும் விதிக்கப்படும்.

**தாபரிப்புப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுதல்**

பராமரிப்புச்சட்டத்தின்கீழ் தாபரிப்புக்கான கட்டளையொன்று வழங்கப்படும்போது, அத்தகைய கட்டளையின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவு, செலுத்தப்பட வேண்டிய ஆளின் பெயரில் குறித்துரைக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு மாதமும் நீதிமன்றத்தின் கட்டளையில் குறிப்பிடப்படும் அஞ்சல் அலுவலகத்தில் அல்லது வங்கியில் வைப்புச் செய்ய வேண்டும் என்று பிரதிவாதிக்குக் கட்டளை வழங்கலாம். அவ்வாறான பராமரிப்புத் தொகையைப் பெறுபவர் அங்கு சென்று பெற்றுக்கொள்ளலாம் ●

2ஆம் பக்கத் தொடர்ச்சி...

நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எமது நாட்டின் முக்கிய உணவுப் பொருட்களான அரிசி, சீனி, மா, பால்மா பருப்பு என்பன நாளுக்குநாள் விலையேற்றப்படுகின்றன. மேற்கூறப்பட்ட விலையதிகரிப்பிற்கு எமது நாட்டில் முக்கிய காரணமாக இருப்பது இனப்பிரச்சினையும் அதனோடு தொடர்புபட்ட போர்ச் சூழலுமே என முன்பு கூறப்பட்டது. ஆனால் இன்று யுத்தம் நிறைவடைந்த பின்னர் கூட, தொழில் வாய்ப்பின்றியும் போதிய ஊதியம் இன்றியும் வாழ வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது. மிக வேகமாக முன்னேறி வரும் விலையேற்றத்தின் காரணமாக உள்ளூர் உற்பத்திகளும் விலையேற்றப்பட்டுள்ளன. அரசு பொருட்களின் விலையை அதிகரிக்கும் அதேவேளை வருமானத்தை அதிகரிக்கும் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில் அக்கறை காட்டவில்லை. மாணியம், நிவாரணம் என்ற வாக்குறுதிகள் வெறும் வாய்ப் பேச்சாக மட்டுமே நிலவி வருகின்றன.

உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படாது. விலைவாசி உயர்வுடன் போராடுகின்ற குடும்பங்களில் வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

பொருளாதாரத்தின் வீழ்ச்சி இடப்பெயர்வு ஆயுதக் கலாசாரம் போன்றவற்றின் காரணமாக குடும்பங்களில் பெண்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்னல்களை எளிதில் கூறிவிட முடியாது. ஒவ்வொரு நிகழ்வுகளின் பின்னனியிலும் பாதிப்புக்களாகின்ற அங்கத்தவர்களாக பெண்களே இடம்பெறுகின்றனர். விலைவாசி காரணமாக சமூகத்தில் நிலவுகின்ற கொலை, களவு எனபன சாதாரண விடயமாக மறிவிட்டன. ஆயுதக் கலாசாரத்தின் பின்புலத்தில் நடந்தேறுகின்ற கடத்தல்கள், கப்பம் கோருதல் போன்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் தமது குடும்ப உறுப்பினர்களை இழந்து பாதிக்கப்படுகின்ற அனாதரவான நிலை அதிகமாகப் பெண்களுக்கே ஏற்படுகிறது.

கணவன் அல்லது மகனது வருவாயை நம்பி வாழ்கின்ற ஒரு பெண் அவர்களை இழக்கின்ற போது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றாள். அதேநேரம் அவ்வாறான ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் போது அவரின் நாளாந்தத் தொழில், குடியிருப்பு வசதி குழந்தைகளின் எதிர்காலம் என்பன இல்லாமல் போகின்றது. இவற்றோடு மனித உரிமை மீறல்கள் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. மனித உரிமைகள் பற்றியும் மனித உயிரின் பெறுமதி பற்றியும் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் இச்சூழலில் எத்தனை பெண்களின் கணவன்மார்கள் காணாமல் போய் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கும் அவளது குழந்தைகளுக்கும் யார் பாதுகாப்புக் கொடுப்பது. அவளது குடும்பத்திற்கு யார் வருமானத்தைக் பெற்றுக் கொடுப்பது.

நாளாந்த சமூகங்களில் இடம்பெறுகின்ற இவ்வாறான நிகழ்வுகள் ஒவ்வொன்றும் பெண்களது வாழ்வாதார உரிமைகளைப் பறித்துக் கொண்டிருக்கின்ன. இவற்றிற்கான காரணங்கள் சரியாகக் கூறப்படாததோடு போதிய சாட்சியங்கள் இல்லாமையாலும் அரசியல் செல்வாக்கின் காரணமாகவும் வெளிவருவதில்லை. இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டார், கடத்தப்பட்டார் என்ற வார்த்தைகளோடு வழக்குகள் மூடப்படுகின்றன. இவ்வாறான சம்பவங்களின் பெறுபேறுகள் உயிரழிவோடு மட்டும் நின்று விடாது கணவன்மார்களை இழந்து பெண்கள் குழந்தைகளோடு

**கணவன் அல்லது மகனது வருவாயை நம்பி வாழ்கின்ற ஒரு பெண் அவர்களை இழக்கின்ற போது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றாள். அதேநேரம் அவ்வாறான ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் போது அவரின் நாளாந்தத் தொழில், குடியிருப்பு வசதி குழந்தைகளின் எதிர்காலம் என்பன இல்லாமல் போகின்றது.**

தனித்து வாழ்கின்ற அவலத்தைத் தோற்றுவிக்கின்றது. மேலும் வன்முறைகள் தற்போது ஆண் பெண் இருவரையும் பால் வயது வித்தியாசமின்றிப் பாதித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாகக் குறிப்பிடப்பட்ட பொருளாதார வீழ்ச்சி மனித உரிமை மீறல்கள் காணாமல் போதல் கடத்தல் மற்றும் பாலியல் பலாத்காரம் போன்ற அனைத்து வன்முறைகளாலும் பல குடும்பங்களில் பெண்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இவற்றிற்கான தீர்வுகள்; இதுவரையில் முன்வைக்கப்படவில்லை. அத்துடன் காரணங்களும் அலசி ஆராயப்படுவது குறைவாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கன.

- அமுதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியை சர்வதேசமயப்படுத்துவதில் தனிநாயகம் அடிகளாரின் தனித்துவமான பங்களிப்பு

## (The Unique Contribution of Rev. Fr. Thaninayagam to internationalize Tamil Language)

### முன்னுரை

தனிநாயகம் அடிகளாரைப் போன்று தமிழ் அறிந்த அறிஞர்கள், பன்மொழி வல்லுனர்கள் பலர் தமிழகத்திலும், ஈழத்திலும் இருந்துள்ளனர். இதைவிட தமிழறிந்த மேனாட்டு தமிழ் அறிஞர்களும் இருந்துள்ளனர். இவர்களின் தமிழ்ப் பணியிலிருந்து தனிநாயகம் அடிகளாரின் தமிழ் பணியின் தனித்துவம் என்ன என்பதையும் அந்தத் தனித்துவமான தமிழ்ப் பணியினால் அவர் எவ்வாறு தமிழைச் சர்வதேசமயப்படுத்தினார் என்பதையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

தமிழர்களின் பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை மேலைநாட்டவர்களுக்கு விளக்கியுரைத்த தமிழ் அறிஞர்கள் அணியிலே தனிநாயகம் அடிகளார் தனித்துவமான இடத்தைப் பெறுகின்றார். இருபதாம் நூற்றாண்டுத் தமிழாராய்ச்சியை எண்ணிப் பார்க்கும்போது தனிநாயுக அடிகளாரை எந்த ஆய்வாளனாலும் மறக்க முடியாது. உலக அரங்கில் தமிழாராய்ச்சிக்கு ஒரு சிறப்புமிக்க இடத்தை உருவாக்கியதில் அடிகளாருக்குப் பெரும் பங்கு உண்டு.

### தமிழின் சர்வதேச வெற்றிடமும் தனிநாயகம் அடிகளாரும்

தனிநாயகம் அடிகளார் தமிழ் உலகத்திற்குள் காலடி எடுத்து வைத்தபோது தமிழ் உலகம் சிறியதாய் இருந்தது. ஒரு குறுகிய வட்டத்திற்குள் அது சுழன்றுகொண்டிருந்தது. தமிழ் அறிஞர்களும், பண்டிதர்களும், பாவலர்களும், புலவர்களும் தமிழின் சிறப்பை, தமிழ் இலக்கியத்தின் இனிமையை தங்களுக்குள் பாடிக்கொண்டும், கட்சிகளாக போட்டி போட்டுக்கொண்டும் இருந்தார்கள். தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவ யார் வருவார் என ஏங்கியும், நலிந்தும், கனவுகண்டும் கற்பனையில் மிதந்துகொண்டிருந்தார் பாரதியார். இவ்வேளையில் துயில்கொண்டிருந்த தமிழ் மக்களை தட்டியெழுப்பினார் தனிநாயகம் அடிகளார். நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவாக அவர் வந்தார். முகிலைக் கிழித்துவரும் பகலவனைப்போன்று தமிழர்களின் துயிலைக் கலைத்துவரும் பகலவனாக தனிநாயகம் அடிகளார் வந்தார். உலகின் பல்வேறு நாடுகளுக்கும் தமிழ்ப்பண்பாட்டின் தூதுவராக அவர் பறந்துசென்றார். தமிழ் மொழியின் மாண்பையும், தமிழ் இலக்கியத்தின் இனிமையையும் எடுத்து இயம்பினார்.



அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்

தமிழ்மொழியின் சர்வதேச வெற்றிடத்தை நிரப்ப தனிநாயகம் அடிகளார் எவ்வாறு உழைத்தார் என்ற உண்மையை எடின்பரோ பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆர். ஈ. ஆஸர் இப்படிக் குறிப்பிடுகின்றார்,

"சர்வதேச அறிஞர்கள் மத்தியில் தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாட்டு ஆய்வுகள் தொடர்பான அக்கறை குறைவாக இருந்ததை பல தசாப்தங்களுக்கு முன்னரே தனிநாயகம் அடிகளார் உணரத்தொடங்கினார். இந்த நிலமையை மாற்றியமைக்க அவர் முனைந்தார். அடிகளாருடைய சுயசிந்தனையான அகத்தூண்டல் மற்றும் நீடித்த ஆவல் காரணமாகவே உலகளாவிய ரீதியில் பண்பாட்டோடு தொடர்புடைய மனிதர்களின் மனங்களில் தமிழ் உரிய இடத்தைப்பெற முடிந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தியாவின் வழக்கிலிருந்த பல மொழிகளில் ஒன்று மட்டுமே என அறியப்பட்டிருந்த தமிழ் மொழியை அனைத்துலக இலக்கிய வானில் சிறப்பிடம்பெற அடிகளார் வழிவகுத்தார். தனிநாயக அடிகளார் இல்லாதிருந்தால் தமிழ் மொழி எங்கேயோ ஒரு மூலையில் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், இன்னும் ஒருசில நாடுகளிலும் பேசப்பட்ட மொழியாக பேசப்பட்டுவருகின்ற மொழியாக மட்டுமே இருந்திருக்கும். உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் தமிழ் மொழியை எடுத்துச் செல்வதற்கு அடிகளார் காரணமாக இருந்தார். தமிழ்கூறும் நல்லுலகின் கலங்கரை விளக்கமாக அவர் கருதப்பட்டார்.

### 1 சர்வதேச செயற்பாடுகளுக்கு ஏதுநிலையாக அவாஜீடம் விளங்கிய திறன்கள்

தமிழ் மொழியை சர்வதேசமயப்படுத்துவதற்குரிய தகுதிகளை தனிநாயகம் அடிகளார் கொண்டிருந்தார். அவருக்கிருந்த பன்மொழி ஆற்றல், பல்துறைஅறிவு, சிறந்த ஆங்கிலத் தேர்ச்சி, தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு போன்றவற்றில் அவருக்கிருந்த தேர்ச்சி போன்றவற்றை இத்தகுதிகளாகக் குறிப்பிடலாம்.

தனிநாயக அடிகளார் பன்மொழி ஆற்றல் வாய்ந்தவராக விளங்கினார். இலத்தீன் மொழி, இஸ்பானிய மொழி, போர்த்துக்கேசிய மொழி, பிரெஞ்சு மொழி, இத்தாலிய மொழி, ஜேர்மன் மொழி போன்றவைகளுடன் மற்றும் சில ஐரோப்பிய மொழிகளின் இலக்கியக் கடலில் மூழ்கி ஆழமாக நீந்தும் ஆற்றலைப் பெற்றிருந்தார். தமிழ் மொழியின் இலக்கியச் சிறப்பை பிறமொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வுசெய்வதற்கு மேற்கூறிய கல்வியாற்றல் துணை நின்றது கண்கூடு.

வேர்ஜில், சீசெறோ, பிளேற்றோ, அரிஸ்டோட்டில், டாந்தே, டாசோ, ஒல்டென்பேர்க், விஜ்ஜோசா, மக்கோலி, றஸ்கின் போன்றவர்களின் ஆக்கங்களில் இருந்து தங்குதடங்கல் இன்றி மேற்கோள்களைக் காட்ட வல்லுனராக இருந்தார். தக்சசிலா, நாலந்தா, இராமானுஜர், சைவ சித்தாந்த ஆசாரியர் போன்ற மெய்யியல் வல்லுனர்கள் பற்றியும் மொகலாயக் கட்டடக் கலை, தமிழ்ச் சிற்பக் கலை போன்றவை பற்றியும் ஆய்வுசேர் அறிவில் மலரும் உரையாடலை ரீ தவும் வல்லவர்.

அவருடைய அறிவுப் புலமை, ஆர்வம், தொடர்புகள், சந்திப்புக்கள் மூலமாக தமிழ் மொழி சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொண்டது

"ஓர் அரசுத்தூதரின் நாகாறிகமும், புலிட்சர் பரிசு பெறுவோர்க்குரிய சொல் வளமையும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அறிஞருக்குரிய ஆங்கிலப் பேச்சு முறையும் கொண்டவர்" என பார்பரா ஜென்க்சு என்னும் அமெரிக்க அம்மையார் அடிகளாரைப்பற்றிக் குறிப்பிடுவது முற்றிலும் பொருந்தும்.

### பகுதி 1. தமிழைச் சர்வதேசமயப்படுத்துவதில் அடிகளின் முன்முயற்சிகள்

தமிழ் மொழியை சர்வதேசமயப்படுத்துவதற்கு தனிநாயகம் அடிகளார் சில முன்முயற்சிகளில் ஈடுபட்டார். அதில் முக்கியமான நான்கு விடயங்கள் இக்கட்டுரையின் முதல் பகுதியில் ஆராயப்டுகின்றன. அடிகளாரின் தமிழ்த்தூதுப் பயணங்கள், அவர் வெளியிட்ட ஆங்கில முத்திங்கள் ஏடு, அவர் பின்புலமாக இருந்து ஆரம்பித்த உலகத் தமிழாராய்ச்சி மன்றம், அவர் கூட்டிய உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் என்பனவே அவை. இவற்றின் மூலம் அடிகளார் எவ்வாறு தமிழைச் சர்வதேசமயப்படுத்த முனைந்தார் என்பதைப் பார்ப்போம்.

### 1. தமிழ்த்தூது பயணங்களும் தமிழின் சர்வதேசமயப் படுத்தலும்

உலக நாடுகளில் தமிழ் இலக்கியங்களைப் பற்றியும் கலைகளைப் பற்றியும் உரைகள் நிகழ்த்த வேண்டுமென்னும் எண்ணம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவராக இருந்தபோது அடிகளாரின் உள்ளத்தில் முகிழ்த்தது. தமிழ் இலக்கியத்தில் தோய்ந்திருந்த அடிகளார் அதனை உலகறியச் செய்யும் வகையில் உழைத்திட அப்போதே உறுதி பூண்டார்.

"நான்காண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று எம். ஏ. சிறப்புப் பட்டமும், எம். லிட். ஆராய்ச்சிப்பட்டமும் பெற்றேன். தமிழ் கலைகளில் மூழ்கியிருந்த நான் அந்தக் காலத்திலேயே நம் ஒப்பற்ற இலக்கியத்தைப் பற்றி உலகு அறியவேண்டுமென ஒரு சிறிதாகுதல் உழைக்க உறுதி பூண்டேன்" என்று அடிகளாரே கூறியுள்ளார்.

தனது தமிழ்த்தூதுப் பயணங்களின்போது அடிகளார் தமிழின் சிறப்பை எடுத்துக்கூறினார். தனது தமிழ்த்தூதுப்பயண அனுபவங்களிலே அமெரிக்கப் பயண அனுபவத்தைப் பற்றி அவர் குறிப்பிடுபவற்றை இங்கு பதிவு செய்தல் பொருத்தமாகும்.

"அமெரிக்கா இற்றை ஞான்று தோன்றிய நாடு; இன்னும் இளமை நிலையில் இருக்கின்றது. ஒரு நூற்றாண்டு, இரு நூற்றாண்டுகள் படைத்த இடங்கள் அல்லது பொருட்கள் என்றால் அமெரிக்கர்களுக்கு மிகப்பழைய பொருட்களாகவும், இடங்களாகவும் தோன்றுவன. ஆதலால் அவர்கட்குத் தமிழர் பழமையும், தமிழரின் பண்டை வணிகத்தையும், இயவனர், உரோமர் போன்றோருடன் தமிழ் நாட்டு நட்பையும் கூறியபோது அவர்களுக்குப் பெரிதும் வியப்பு உண்டாயிற்று. அவருட் பெரும்பாலோர் இந்திய இலங்கை வறுமை பற்றியும் உடல் நலம் குன்றிய மக்கள் பற்றியும், நோயுற்ற ஊர்கள் பற்றியும் கேள்விப்பட்டிருந்தனர். எனினும் தமிழ் நாட்டின் கலைகளை, தமிழ் இலக்கிய நிதிப்பெருக்கை, தமிழ் மொழியின் சிறப்பியல்பை, பழந்தமிழ் காதற் பாக்களை, பக்திமாலைகளைப் பற்றிக் கேள்விப்பட்டவர் அல்லர். அவர்கட்குத் தமிழ் இலக்கியத்திலிருந்து திருக்குறள், பரிபாடல் பகுதிகளை நான் மொழிபெயர்ப்புடன் எடுத்துக்கூறி விளக்கினேன்."

அடிகளாரின் உலகச் செலவு வெறும் பொழுதுபோக்காக அமையவில்லை. தமிழ் மொழியின் பண்டைய சிறப்பு, இலக்கியச் செறிவு, உலகக்கண்ணோட்டம், தமிழ்ப் பண்பாட்டினுடைய மேம்பாட்டின் சிறப்பு போன்றவற்றை பாரெங்கும் பரப்புவதாகவே அமைந்திருந்தது. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவச் செய்தார். அடிகளாரின் 'ஒன்றே உலகம்' என்ற நூலில் அவர் தமிழ்த்தூதாகச் சென்ற 25 நாடுகளில் தாம் கண்டதையும், கேட்டதையும் சுவைபட எடுத்துக் கூறுகின்றார்.

"உரோமன் கத்தோலிக்க குருவாயிருந்தும் இவரது பணி மத வரம்புகளை மீறிப்பாய்ந்தது. இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் செல்லத்தவறிய இடங்களுக்கெல்லாம் அடிகளார் சென்று தமிழ் மணம் பரப்பினார்கள்" என 1980ஆம் ஆண்டு தினகரன் என்ற வார மஞ்சரி அடிளாருக்கு புகழாரம் சூட்டியது.

தொடரும்...

## முகவரியைத்தேடி...

முழுநிலவேஎன்
முகவரியைத் தேடித் தருவாயா?
உன்னைப் போல் நானும்
முழுமைபெற்றுவிட

முடியாதுஎன்றுநீ
முற்றிலும் மறுத்துவிடாதே
முன்பிருந்தஎம் முகபாவமெல்லாம் நம்
முன்னோலீ;கள் தந்தவையே

உள்ளக் கிடக்கைகளை
உன்னிடமே கூறுகின்றேன்
உன் தூர வழிப் பயணத்திலேஎம்
உறவுகளைத் தேடித் தா...

தொலைந்துபோனஎம்
தொப்புள் கொடிஉறவுகளை
தொலை தூரம் தொடா;ந்துசென்று
பத்திரமாய் கூட்டிவா...

பள்ளிப் பருவத்திலே
பக்குவமாய் பலம் சோ;த்த
பள்ளித் தோழிகளை
பக்கத்திலே கூட்டிவா...

உன்னோடுநாம் என்று
உறவிற்குஉரம் சேர்த்த
உற்றஉறவுகளை
உடனடியாய் கொண்டுவா...

தள்ளாடியவயதிலும்
தம் உயிரைப் பணயம் வைத்து
நம்மையெல்லாம் வாழவைத்தநம்மவரை
நலமோடு கூட்டிவா...

மழலைஎன் மொழிகேட்டு
மகிழ்வோடுமலர்ந்திருக்கும் உன்
மதிவதனம் கண்டுஎன்
மனமெல்லாம் பூரிக்கின்றது

தொலைத்தஎன் முகவரியைநீ
தேடித் தருவாய் என்று.

ஆ. பிருந்தா, மண்டைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை வாறா, பிள்ளை வாறா, எண்டு கடைசியிலை பிள்ளையும் வந்திட்டா. பஞ்சசீலத் துறவியள் ஈராக்கிற்கும், ஆப்கானிஸ்தானுக்கும் பிள்ளையைப் போகச்சொல்லி ஆர்ப்பரிச்சிருக்கினம். மறிச்ச காக்கிச்சட்டையளையும் தாக்கியிருக்கினம். காணாததுக்கு அதிகாரம் தூண்டிவிட்ட ஆக்கள் சிலபேர் யாழ்ப்பாணத்திலயும் பிள்ளைக்கு முப்பது வருக்ஷமா நடந்தததையும் விசாரிக்கச் சொல்லி உபதேசம் பண்ணி ஊர்வலம் நடத்தியிருக்கினம். இதெல்லாம் எங்களிலை கனபேருக்கு சந்தோசம். அவை பிள்ளைக்கு எதிர்ப்புக் காட்டக் காட்ட அவ எங்களுக்கு ஆதரவாய் மாறியிடுவா எண்டது எங்கடை ஆக்களின்ரை கணிப்பு.

உங்களுக்கு ஞாபகமோ தெரியாது முந்தி ஒருகாலம் இப்பிடித்தான் பூரி வாறார், குப்தா வாறார் எண்டு ஓடித்திரிஞ்சனாங்கள். பக்கத்து வீட்டு இத்தாலி மருமகனுக்கு எங்கடை நாட்டு கப்பல்படைக்காரன் அடிச்சுப்போட்டார் எண்ட உடன இனி எங்களுக்குத் தனிநாடுதான் எண்டு பொங்கிப் பூரிச்சனாங்கள். கடைசியாய் அவை வந்ததின்ர விளைவு எங்களைக் கொண்டுபோய் எங்க விட்டதெண்டு விளங்க இருபத்திரண்டு வருசம் பிடிச்சது. பிள்ளை வந்ததும் ஏனெண்டு விளங்கக் கனகாலம் பிடிக்கும் பாருங்கோ.

◈ ◈ ◈

சபைத்திருவிழா தொடங்கினதோடை நான் ஆதித்தியா, சிரிப்பொலி எண்ட மாதிரிச் சனலுகள் பாக்கிறதை விட்டிட்டன். சிரிப்புக்குப் பஞ்சமில்லைப் பாருங்கோ. கூட்டுறவுச்சிங்கம் மண்டபத்தில எங்கட நகைச்சுவை நடிகர்மார் கலக்கினவையல்லோ. அதிலை சாமஸ்ரீ, சமாதானநீதவான், காப்புறுத்துறகொம்பனித் தம்பியின்ரை நண்பர்கள் குடுத்த நோட்டீஸ் பாத்தனிங்களே?. தம்பி எங்கையெங்கை எல்லாம் பந்தடிச்சவர், பதக்கம் வாங்கினவர், பந்தடிக்கப் பழக்கினவர் எண்டு விளக்கமோ விளக்கம். தம்பியும் மேடையிலை பேசேக்க யாழ்ப்பாணம் பெரிய பள்ளிக்கூடத்திலை படிக்கேக்க பெரிய பானை வைச்சு தமிழைப் பொங்கினதும் தான்தான் எண்டு சொன்னவர். நோட்டீசிலை அதைப்பற்றி ஒரு சொல்லும் இல்லை. தமிழிலை தமிழரசுக்கட்சி சிங்களத்திலை சமக்ஷ்டிக்கட்சி எண்டமாதிரி புது ஆக்களும் தெளிவாத்தான் இருக்கினம். சரி அதைவிடுங்கோ பாராளுமன்றத்திலை கிரிக்கெட் விளையாடின மாதிரி இராஜதந்திரப் போரிலையும் பந்தடிக்க வேண்டியிருக்குமோ ஆர் கண்டது.

கூட்டுறவுச்சிங்கம் மண்டபத்திலை பேசின எல்லாரும் சர்வதேசத்துக்கு மக்கள் தெளிவான ஆணையைக்காட்டவேணும் எண்டு பேசினவை. முப்பத்தாறு வருசத்துக்கு முதலே அமுதர் உயர்த்தின கொடிக்கு ஆணை வழங்க ஆரம்பிச்சு 2004, அதுக்குப்பிறகும் பெரிய, சின்னத் திருவிழாக்களிலையும் வழங்கினதெல்லாம் மக்கள் ஆணையில்லையோ. அல்லது இதையெல்லாம் மறந்து நாங்கள் ஒருநாளும் தனிக்குடித்தனத்துக்கு ஆசைப்படயில்லை எண்டு கதைச்ச எங்கடை தேசியப்பட்டியல் மாதிரி சர்வதேசமும் மறந்திருக்கும் எண்டு நினைக்கினமோ தெரியேல்லை.

1976 இல் தனிக்குடித்தனம் எண்டவை 1981இல் வட்டச்சபைக்கு வாய்திறந்த மாதிரி. 2010 இல் சமக்ஷ்டி பற்றிப் பேசிட்டு, பிறகு 13கூட்டல், இப்ப 13 எண்டு குத்துக்கரணம் அடிக்கேக்கை மக்கள் ஆணையைப் பற்றி யோசிக்கயில்லையோ. இப்பிடியே போனால் எதிர்காலத்திலை சனம் வேறமாதிரி யோசிக்கலாம் பாருங்கோ.

◈ ◈ ◈

நடக்க ஏலாத மனிசனை வைச்சு உருட்டிக்கொண்டு திரிய சில்லுக் கதிரை கேட்டு எங்கடை பிரதேசக் காரியாலயம் ஒண்டுக்கு ஒரு பொம்பிளை போயிருக்குது "கதிரை வந்திருக்குது. ஆனால் இப்ப குடுக்க மாட்டம். திருவிழா முடிஞ்சபிறகு வாருங்கோ" எண்டு பொறுப்பாய்ப் பதில் சொன்னவையாம். விசாரிச்சுப் பார்த்ததிலை சில்லுக் கதிரை, ஊன்றுதடி குடுக்கிறதையும்

# சுவாமி



# வம்பானந்தா

**புரிந்தால் புன்னகை செய், புதிர் என்றால் புருவம் உயர்த்து**
**பிதற்றல் எனத் தோன்றின் பிழையும் திருத்து... –கமல்ஹாசன்**

முடியுமானவரை தவிர்க்கச் சொல்லித் திருவிழா ஆணையாளர் அறிவிச்சது உண்மைதானாம்.

அதையும் ஆரும் அரசியலாக்கிப் போடுவினம் எண்டதுதான் காரணமாம். கடும் அவசரமெண்டால் தன்னட்டை அனுமதியெடுத்து குடுக்கச்சொன்னவராம். நீதியா, நேர்மையா, திருவிழா நடக்கிறது நல்லதுதானுங்கோ. ஆனால் அதை எப்பிடி உறுதிப்படுத்துகினம் எண்டு பாத்தால் சத்தியமாய் சிரிப்பு வரயில்லை, சனத்தையும் அவையையும் நினைச்சு அழுகைதான் வருகுது. திருவிழாவுக்கு முந்தின திருவிழாவாய் பச்சை உடுப்புக்காரர் குடியிருந்த வீடுகளைக் கையளிக்கிற திருவிழாக்கள் பரவலாய் நடக்கிறதையும் அதுக்கு எங்கடை பிரதேசத்தை, கிராமத்தை பரிபாலிக்கிறவை போய் நிண்டு கூனிக்குறுகிப் பல்லிளிக்கிறதையும் திருவிழா ஆணையாளர் பேப்பரிலை பாக்கேலைப்போலை.

◈ ◈ ◈

"எங்கட ஐயா ஒருநாளும் வைத்தியம் படிச்சதில்லை, ஆனால் பிரபல வைத்திய நிபுணர்களைவிட கெட்டிக்காரன். சகலவிதமான நோய்களுக்கும் வைத்தியம் செய்வார், ஒப்பின் தியேட்டரிலயே ஒப்பிரேசன் செய்வார்" எண்டமாதிரி ஒரு கதை வாசிச்சனான்.

மற்றப்பக்கத்தில முதன்மையா நிக்கிற நரைச்ச தாடிக்கு எந்தவகையிலும் சளைக்காத நரைக்காத தாடி இவர். அவர் கறுவாக்காட்டுநரி எண்டால். இவர் பனங்காட்டுநரி. இவர் அப்புக்காத்து இல்லை, ஆனால் பெரிய பொட்டு அப்புக்காத்துக்களை விட சட்ட அறிவிலையும் ஞானத்திலையும் மேதாவி. எந்தவொரு சட்டத்தையும் இவரிட்டை நீங்கள் சுருங்கப்படிச்சு விரிஞ்சு விளங்கலாம். இப்பிடியெல்லாம் கதை இருந்தது.

புலியைப் பார்த்து பூனை சூடுவைச்சது எண்டு இதைத்தான் சொல்லுறதோ தெரியேல. சட்டம் அரசியலை நடத்துவதற்கான ஒரு தொழில்நுட்ப மொழியே தவிர அதுமட்டுமே தகுதியில்லைப் பாருங்கோ. அதுதான் அரசியல் தகுதியெண்டால் இராணி சட்டத்தரணிமார் காலத்திலையே எங்கடை பிரச்சினை தீர்ந்திருக்கும்.

◈ ◈ ◈

சிலபேருக்கு கஸ்டகாலம் வெளியிலை இல்லைப்பாருங்கோ. பெத்துப் பேர்வைச்சிட்டு கூடவே இருக்குது. நான் சொல்லுறது விளங்குதே?. அமுல்பேபி மாதிரி அழகாய் சிரிக்கிற தம்பி இந்தமுறை கதிரையைப் பிடிப்பார் எண்ட நம்பிக்கை அதிகம் இருந்தது. சின்ன ஊழியம் பார்க்கிற உத்தியோகமும், நிவாரணமூர்த்தி வேலையும் கனபேருக்கு எடுத்துக் குடுத்தவரல்லோ. அந்த நன்றிக்காக இளங்கூட்டமொண்டு அவருக்கு விசுவாசமா நிக்குது. சனத்தோடையும் நல்லவிதமா கன்னியமாய் பழகிறார் எண்டும் கதை.

இதையெல்லாம் கூட இருக்கிறவர் கெடுத்துப்போடுவார் போலை கிடக்குது. போன பெரிய திருவிழாவிலை யாழ்ப்பாணத்துப் பெரியம்மாவின்ரை குடுமியைப் பிடிச்சதும் வாகனம் உடைஞ்சதும் சனத்துக்கு மறந்துபோச்சு. இந்தமுறை திரும்பவும் ஞாபகப்படுத்துற மாதிரி யானை முகத்தானையும், தம்பியரசரையும் வழிமறிச்சு கண்ணாடியை உடைச்சதெண்டும், கையை முறுக்கினதெண்டும் சொல்லி தம்பியரசர் சாகுமட்டும் சாப்பிடாமல் இருக்கிறார். காணாததுக்கு பச்சைச்சட்டைக்காரர் பச்சைப் பார்ட்டியிலை இருந்து தேடிக் கொண்டுவந்து நீலத்துக்கை விட்ட், பொடியனுக்கு ஐயா பட்டாசு சுட்டிருக்கிறார். உண்மையா தம்பி பாவம்.

◈ ◈ ◈

ஒருத்தரையும் பழிசொல்லுறது என்ரை நோக்கமில்லைப் பாருங்கோ. அது என்ரை வேலையுமில்லை. பாதை நேராயிருந்தால் பயணம் சுகப்படும் எண்ட அக்கறையிலை கதைக்கிறன். முதல்பேப்பர் வாசிக்காத ஆக்களுக்காக சொல்லுறன், நீங்கள் எனக்கேதும் எழுதிறதெண்டால் vampanantha@gmail.com க்கு எழுதுங்கோ. அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.

# முகத்தார் யேசுரட்ணம்

## ஈழத்துக்கலை முகவரி



ஈழத்தின் புகழ்பெற்ற ஒரு நாடக நடிகரும், வானொலிக் கலைஞரும், திரைப்பட நடிகரும், எழுத்தாளரும், நெறியாள்கையாளருமென கலைத் துறையின் அனைத்துத் துறைகளிலும் சுமார் நாற்பது வருடங்களுக்கு மேலாக புகழோடு விளங்கியவர் " கலைமாமணி" இளவாலை, முகத்தார் யேசுரட்ணம். யாழ்ப்பாண வட்டார வழக்குச் சொற்களை நகைச்சுவைக்காக மட்டுமன்றி காத்திரமான படைப்புகளிலும் கையாள முடியும் என்பதை எடுத்துக் காட்டியவர்.

சந்தியாப்பிள்ளை யேசுரத்தினம் அவர்கள் முகத்தார் யேசுரட்ணம் ஆனது ஓர் இலக்கியச் சம்பவம். இலங்கை வானொலியில் இவரது எழுத்து, நடிப்பு, இயக்கத்தில் தொடராக ஒலிபரப்பான "முகத்தார் வீடு" 15 நிமிடத்துக்குள் ஒரு விவசாயக் குடும்பத்துள் நடக்கும் நகைச்சுவையான சம்பவங்களுடன் விவசாயத் தகவல்களை வழங்குமொரு நிகழ்ச்சியாக சுமார் ஐந்து வருடங்கள் (268 வாரங்கள்) ஒலிபரப்பாகி சாதனை படைத்ததால் இவர் பெயருக்கு முன்னால் "முகத்தார்" என்னும் பெயர் இணைந்துகொண்டது. "முகத்தார் வீடு" யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் அமைந்திருந்ததுடன், நூற்றுக்கணக்கான குடும்பப் பிரச்சினைகளை யதார்த்தபூர்வமாகச் சித்தரித்தது. இந் நாடகம் பின்னர் பாரிஸில் திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டது.

இளவாலையில் பிறந்த யேசுரத்தினம் புனித ஹென்றியரசர் கல்லூரியில் கல்வி கற்றார். இலங்கை சந்தைப்படுத்தல் திணைக்களத்தில் முப்பத்துமூன்று வருட காலம் பணியாற்றி 1984 ஆம் ஆண்டில் பணி ஓய்வு பெற்றார். இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங்களினால் ஐந்து தடவைகள் அகதியாக்கப்பட்ட அனுபவத்தைப் பெற்றிருந்தார். 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரத்தின் போது ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய ஆலயத்தில் அகதியாக்கப்பட்டு, பின்பு 1985ம் ஆண்டு முதல் திருச்சியிலும், சென்னையிலும் அகதி வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றார். 1993 ஆம் ஆண்டில் பிரான்சிற்குப் புலம்பெயர்ந்து தான் இறக்கும் வரை பிரான்சிலேயே வசித்து வந்தார்.

பாடசாலைக் காலத்தில் தன்னை நடிகனாக அடையாளம் காட்டினார். ஆரம்பத்தில் ஆங்கில நாடகங்களில் பங்கேற்றாலும் கூட பின்னர் தமிழில் தனது திறனை வெளிப்படுத்தினார். 1966ல் இலங்கை வானொலியில் வானொலிக் கலைஞராக இணைந்த இவர் பல நாடகங்களை எழுதி, நடித்து நெறியாள்கை செய்துள்ளார். இலங்கை வானொலியில் சனி இரவு "நாடகம்" ஞாயிறு பகல் "கதம்பம்", "குதூகலம்" போன்ற நிகழ்ச்சிகளில் இவரின் எழுத்துக்கள் மிளிர்ந்திருந்தன. கதம்பத்தில் 123 தனி நாடகங்களையும், பருவக்காற்று தொடர் நாடகத்தையும் (52 வாரங்கள்) எழுதி, நடித்து, நெறியாள்கை செய்த இவரின் வானொலிப் பணி அளப்பரியது. இன்றும் நிலைத்துள்ளது.

சில்லையூர் செல்வராசனின் 'தணியாத தாகம்' வானொலி நாடகமாக உருப்பெற்றபோது இந்த நாடகத்தில் ஒரு மலேசியன் ஓய்வூதியம் பெறுபவராக நடித்தவர். சண்டியன் சின்னத்தம்பி, லண்டன் மாப்பிள்ளை, மாடிவீட்டு மருக்கொழுந்து, முழியல வழ னுரடியன, மோசடி பத்தாயிரம், மண்ணோடு விளையாடும் விண்ணுலகம், சத்தியமே ஜெயம், பண்டாரவன்னியன், புரோக்கர் பொன்னம்பலம், அசோகரா, உயிரோடு காடர்ந்து போன்ற நாடகங்களை இவர் எழுதி, நடித்து நெறியாள்கை செய்தவர்.

முகத்தார் யேசுரட்ணம் அசட்டு மாப்பிள்ளை, ஆசைமச்சான், கறுப்பும் சிவப்பும், பாசச்சுமை, நம்பிக்கை முதலான மேடைநாடகங்களிலும் நடித்தவர். எஸ். அகஸ்தியர் எழுதிய "அலைகளின் குமுறல்", "எரிமலை வெடித்தபோது", ''கோபுரங்கள் சரிகின்றன'' ஆகிய நாடகங்களிலும், கே. எம். வாசகர் இயக்கத்தில் மனிதவலை, தணியாத தாகம் ஆகிய மேடை நாடகங்களிலும், சுமதி (தொலைக்காட்சி நாடகம்) ஆகியவற்றிலும் நடித்துள்ளார். 1979ல் வெளியான "வாடைக்காற்று" திரைப்படத்தில் பொன்னுக்கிழவன் என்னும் பாத்திரத்தில் திறம்பட நடித்திருந்ததால் அன்றைய ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனா அவர்களினால் இவருக்கு ஜனாதிபதி விருது கிடைத்திருந்தது. ஈழத்துத் தமிழ் திரைப்படத்துறைக்கு முகத்தார் யேசுரட்ணத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தயாரிக்கப்பட்ட வாடைக்காற்று, கோமாளிகள், ஏமாளிகள் ஆகிய மூன்று தமிழ்த் திரைப்படங்களில் இவர் நடித்துள்ளார். அத்துடன் "பொன்மணி" திரைப்படத்துக்கு பின்னணிக் குரல் கொடுத்துள்ளார். பிரான்சிற்குப் புலம் பெயர்ந்த பின்பு சத்திய கீதை, முகத்தார் வீடு, இன்னுமொரு பெண், புயல், முகம், ராஜாவின் ராகங்கள், தாகம் போன்ற சின்னத் திரைப்படங்களில் நடித்துள்ளார்.

புலம் பெயர்ந்த பின்பு ஐரோப்பிய வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் இவரது கலைப் பணிகள் தொடர்ந்தன. தமிழ் றேடியோ தொலைக்காட்சி (TRT) நிறுவனத்திலும், ஏசியன் புறோட்காஸ்ட் கோப்பிரேஷன் (ABC) நிறுவனத்திலும் வானொலி நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றியுள்ளார். பிரான்சில் யேசுரத்தினம் மேடையேற்றிய 'முகத்தார் வீட்டில்' வானொலி நாடகப் பிரதிகள் ஐந்து, மேடை நாடகங்கள் மூன்று, வேறு வானொலி நாடகப் பிரதிகள் நான்கு என மொத்தம் 12 நாடகங்களை 'முகத்தார் வீட்டுப் பொங்கல்' என்ற பெயரில் 1999ல் மணிமேகலைப் பிரசுரமாக வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதி விருது (1979), கலைமுரசு விருது(1980), முகத்தார், கௌரவ விருது(1981), விவசாய மன்னன், கௌரவ விருது(1982), கலைப் பணிச் செல்வர், (திருச்சி, தமிழ்நாடு) (1983), கலைவேள் கௌரவ விருது (பிரான்ஸ் -1994) கலைப்பூபதி விருது (பாரிஸ் - பிரான்ஸ் -1995) கலைமாமணி விருது (ஜேர்மனி) (1997) நகை ரசவாரி (ஜேர்மனி) (1998) முத்தமிழ்ச் செல்வர் (பிரான்ஸ்) (2005) கம்பன் பட்டயம் விருது (பிரான்ஸ்) (2005) ஈழத் தமிழ் விழி விருது (பிரான்ஸ்) (2007) என பல கலை இலக்கிய விருதுகள் பெற்ற முகத்தார் யேசுரட்ணம் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து 2010 நவம்பர் 27 சனிக்கிழமை அன்று பிரான்சில் காலமானார். ஈழத்து வானொலி பற்றியும், கலைமரபு பற்றியும் பேசுமிடமெங்கும் முகத்தார் பற்றிய பேச்சும் இருக்கும்.

**வரணியூரான் (ஜூனியர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஞானாலயம்'





இ. து. குலசிங்கம்

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட 'ஞானாலயம்' ஆய்வு நூல்நிலையமும் தியான மண்டபமும் திறப்புவிழா 01.09.2013 அன்று நடைபெற உள்ளது.

நூற்கண்காட்சியில் 1960களின் பிற்கூறில் மற்றும் 70, 80களில் தமிழகத்தில் இருந்து வெளிவந்த சஞ்சிகைகளின் தொகுப்புக்களும் அரிதான நூல்களும் காட்சிப்படுத்தப் பட உள்ளன.

பருத்தித்துறையைச் சேர்ந்த இலக்கிய ஆர்வலரான இ.து.குலசிங்கம் மற்றும் அவரது சகோதரர் இ.து.இரத்தினசிங்கம் ஆகியோரின் முயற்சியினால், விருப்பினால் இந் நூல்நிலையமும் கருத்தரங்கு மண்டபமும் சமூகப் பயன்பாட்டிற்கென இவர்களது தந்தையார் அமரர் திரு. இ. துரைராஜசிங்கம் அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ளது.

இன மத பேதங்களை மறந்து அனைவரும் ஒன்று கூடும் சர்வ மத ஆலயம் போன்று தியான மண்டபம் அமைக்கப் பட்டுள்ளமை இதன் சிறப்பாகும். இவ்வாலயத்தில் சர்வ மதங்ளையும் பிரதிபலிக்கும் அழகிய சிற்பங்கள் இந்திய சிற்பிகளினால் வடிக்கப்பட்டுள்ளது.

வாயிலைத் தாண்டி உள் நுளையும் போது மனித மனத்தின் கம்பீரத்தைப் பிரதிபலிக்கும் சிங்கங்களும் மனித மனத்தின் அமைதியைப் பிரதிபலிக்கும் அன்னப் பட்சிகளும் வரேவேற்கின்றன.

உலக இயங்கியலின் குறியீடாகத்திகளும் நடராஜரின் ஆனந்தத் தாண்டவம், மரநிழலின் கீழ் இருந்து ஞானோப தேசம் செய்யும் தட்சிணாமூர்த்தி மற்றும் புத்தர், யேசு, மக்காவில் இறைதூதர் வந்து இறங்கிய இடம் , சீரடி பாபா, ஸ்ரீரங்கநாதர், ஐயப்பன், சித்த ஆயுள் வேத மருத்துவத்தின் மூலவரான தன்வந்திரி, சிவ குடும்பம் ஆகிய சிற்பங்கள் தியான மண்டபத்துக்குள் அமைக்கப்பட்டுள்ளன. நூல்நிலைய மண்டபத்துக்குள் கண்கவர் கலைமகளின் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இஞ்ஞானாலயம் அமைக்கும் எண்ணம் ஏற்படக்காரணம் யாதெனகுலசிங்கம் அவர்களிடம் வினவியபோது: சிறுவயது முதலே வாசிக்கும் பழக்கம் இருந்ததாகவும் ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதனைப் போன்ற பிரமாண்டமான ஒன்றைப் பற்றி அறிந்த போதும், பிற்காலத்தில் ஊட்டியில் அமைந்துள்ள நாராயணகுருவின் சீடரான நித்தியசைதன்யஜதியின் ஆச்சிரமத்தில் ஒருவாரம் தங்கியிருந்தபோது அங்குள்ள நூல்நிலையத்தைப் பார்வையிட்ட போதும் , சென்னையில் அமைந்துள்ள ரோஜாமுத்தையாச் செட்டியாரின் நூல்நிலையத்தைப் பார்வையிட்ட போதும் இவைபோன்ற ஆய்வு நூலகத்தை அமைக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. பொன்வைக்கும் இடத்தில் பூ வைப்பது போல் தனது 50 வருட வாசிப்பின் தேடலினால் சேகரிக்கப்பட்ட புத்தகங்களைப் பலரும் பயன்படும்படி நூல்நிலையமாக அமைப்பது ஆத்ம திருப்தியைத் தருகிறது என்கின்றார் இலக்கியச்சோலை இ. து. குலசிங்கம்.

இவ் ஆய்வு நூல்நிலையத்தை மாணவர்களும் ஆய்வாளர்களும் விரும்பியபோது பயன்படுத்திக் கொள்ளலாம். இங்குள்ள மண்டபத்தில் யோகா மற்றும் தியான வகுப்புக்களும் மருத்துவ ஆலோசனைகள் மற்றும் கலை இலக்கியக் கருத்தரங்குகளும் நடைபெறும்.

காலக்கிரமத்தில் திரைப்படவட்டம் ஏற்படுத்தப்பட்டு கலா பூர்வமான திரைப்படங்கள் காண்பிக்கப்படும் என்பதும் தூரநோக்கான திட்டங்களாகும்.

பா. துவாரகன்



யாழ். பொது நூலகத்திற்கு முன்னால் காணாமற் போனவர்களின் உறவினர்கள் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை சந்திப்பதற்காக அவலங்களுடன் காத்திருக்கும் காட்சிகள்.

## அவதியுற்றோரை அரவணைத்த தாய்



குட்டையான உருவம், முகத்தில் சுருக்கம், எப்போதும் நீலக் கோடுகளைக் கொண்ட தூய்மையான வெள்ளையாடை, முகத்தில் எப்போதும் புன்னகை இவற்றைத் தாங்கியபடி உலக மக்களின் இதயத்தில் வலம் வந்தவர் அன்னை திரேசா. தனக்கு வழங்கப்பட்ட பெறுமதி மிக்க காலப் பகுதியை ஏழைகள், பிணியாளர்கள், துன்பப் பட்டவர்கள், அநாதைகள் ஆகி யோருடன் பின்னிப் பிணைந்து வாழ்ந்தவர். எதிர்வரும் செப்டெம்பர் 5 ஆம் திகதி அவரது நினைவுதினமாகும். அன்னையின் தியாகம் இன்றும் உயிர்வாழ்கின்றது.

## நினைவுகளை இப்படியும் பகிரலாம்



அமரர் டாக்டர் திருமதி லோஷனி லக்ஷ்மன் ஞாபகார்த்தமாக முள்ளிவாய்க்கால் பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்ட அறிவாலயத்தின் முன்பக்கத்தோற்றத்தினைக் காணலாம்.




## சங்கடன் படலை



எமது கட்டடக்கலை பாரம்பரியத்தை கட்டியம் கூறும் அற்புதமான படைப்பு. வீதியால் வருவோர் வெயிலின் கொடுமைக்கு தங்கி இளைப்பாறிப் போவதற்கு என எமது முன்னோர்கள் அமைத்த பல நிழல் கூடங்களில் முக்கியமானதொன்று. வீட்டின் பிரதான வாயிலுக்கு மேலாக கூரைபோடப்பட்டு அத்துடன் கீழே இரு புறமும் அமர்வதற்கும் தூங்குவதற்கும் வசதியாக குந்துகளும் அமைக்கப்பட்டு இருக்கும். அதன் ஒரு மூலையில் மண்குடத்தில் தண்ணீரும் வைக்கப்பட்டு இருக்கும். தமிழர்களின் விருந்தோம்பல் பண்புக்கு முக்கிய சாட்சியாக மிளிர்வது சங்கடன் படலை என்றால் மிகையாகாது.

## பாக்குவெட்டி



நம் முன்னோர்கள் எந்தவொரு விடயத்தையும் எவ்வளவு கலைநயத்துடன் செய்தார்கள் என்பதற்கு வலதுபக்கத்தில் உள்ள பாக்கு வெட்டி தொடர்பான படம் சிறந்த உதாரணம். வெறுமனே பாக்கை நறுக்கும் கருவியாக அதனைக் காணாது அதற்குள்ளும் கற்பனை வளத்தைப் புகுத்தி எத்துணை அழகாக வடிவமைத்துள்ளார்கள்.



எகிப்தில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுக் கலவரத்தின் போது காயமடைந்த தன் மகனைக் காப்பாற்ற முன்னேறிவரும் அரசபடைகளிடம் மண்டியிடும் ஓர் தாய்.

*"யுத்தம் ஒன்று வெற்றியில் முடிகிறதோ தோல்வியில் முடிகிறதோ அவை சிறுவர்களுக்கு எதிராகவே நடாத்தப்படுகின்றன."*
- எக்லைன்டைன் ஜெப்

சிரியாவில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுக் கலவரத்தின்போது காயமடைந்த தன் மகனை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் குறுக்கு வீதி, மணிப்புரி, யாழ்ப்பாணத்திலுள்ள யூட்பிறைனர் அன்ரன் றஞ்சித்குமார் அவர்களால் 30.08.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.